பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்


விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஐப்பசி 01 புதன்கிழமை (18.10.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 322

# 'புலிகளின் குரல்' வானொலி நிலையம் 'கிபிர்' குண்டு வீச்சில் முற்றாக அழிவு!

## ஒலிபரப்புக் கோபுரமும் தகர்ப்பு!



சேதம் அடைந்த ஒலிபரப்புக் கோபுரம்.

கிளிநொச்சி, ஒக்ரோபர் 18

வன்னியில் கொக்காவில் பகுதியில் அமைந்திருந்த 'புலிகளின் குரல்' வானொலி நிலையம் மற்றும் ஒலிபரப்புக் கோபுரம் என்பன நேற்றுக்காலை ஸ்ரீலங்கா விமானப் படையின் கிபிர் விமானங்களால் குண்டுவீசித் தாக்கி அழிக்கப்பட்டிருக்கின்றன.

'புலிகளின் குரல்', 'தமிழீழ வானொலி' ஆகிய சேவைகளை ஒலிபரப்பி வந்த நிலையம், கட்டுப்பாட்டுக் கோபுரம், கலையகங்கள் மற்றும் நவீன ஒலிபரப்புச் சாதனங்கள் என்பன குண்டுவீச்சினால் முற்றாக அழிவடைந்தன என்று விடுதலைப் புலிகள் அறிவித்திருக்கின்றனர். எனினும், மாற்று ஏற்பாடுகள் மூலமாக ஒலிபரப்புச் சேவைகள் தடையின்றித் தொடர்ந்து நடத்தப்படுகின்றன என்றும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. (08ஆம் பக்கம் பார்க்க)

## வானொலி நிலையம் மீதான தாக்குதல் கருத்துச் சுதந்திரத்தை அழிக்கும் செயல்

### போர் நிறுத்த மீறல் எனவும் கண்டனம்



கிளிநொச்சி, ஒக்.18

புலிகளின் வானொலி நிலையம் மீது அரச விமானப் படை நடத்திய தாக்குதல் போர்நிறுத்த மீறலாகும்.

அரசு புரியும் அட்டூழியங்கள் தொடர்பான உண்மைகளை வெளிப்படுத்தும் வழியை தடுப்பதான கருத்துச் சுதந்திரத்தை அழிக்கும் நடவடிக்கையாகவும் இந்தத் தாக்குதல் அமைந்துள்ளது.

இவ்வாறு கண்டனம் தெரிவித்தார் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது மக்களின் உணர்வுகளைப் பாதித்த ஒரு கொடூரமான தாக் (08ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுப் பிரதிநிதி அழிவுகளைப் பார்வையிட்டார்

கிளிநொச்சி, ஒக்.18

சிறிலங்கா விமானப் படையினரின் குண்டுத் தாக்குதலில் அழிவுற்ற "புலிகளின் குரல்" ஒலிபரப்பு வளாகத்தை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வவுனியாப் பிரதிநிதி பார்வையிட்டார்.

இது தொடர்பாக தமது தலைமைப் பணிமனைக்கு தெரிவிக்கவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

"புலிகளின் குரல்" பொறுப்பாளர் நா. தமிழன்பனை சந்தித்து இழப்பு விவரங்களை அவர் கேட்டறிந்தார்.

வானொலி நிலையம் மீதான தாக்குதல் தமிழ் மக்களின் குரல் வளையை நசுக்கும் அடிப்படை மனித உரிமை மீறல் என்று கண்காணிப்புக் குழு பிரதிநிதியிடம் தமிழன்பன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - வானொலி நிலையம் மீதான விமானத் தாக்குதல் குறித்து தமிழீழ விடுதலைப் புலிகள், நோர்வே அனுசரணை யாளர்களுக்கும் தகவல் தெரிவித்தனர்.

## உயிரிழந்தோர் தொகை 115ஐ எட்டியது!

கொழும்பு, ஒக். 18

ஹபரணைக்கு அருகே திஹணபதன என்ற இடத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் உயிரிழந்த கடற்படையினரின் எண்ணிக்கை 115ஆக உயர்ந்திருக்கிறது.

காயமடைந்தோர் எண்ணிக்கை நூற்று ஐம்பதை தாண்டியிருக்கிறது என்றும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. (த)

## கான்ஸ்டபிள் சுட்டுக்கொலை

செங்கலடி, ஒக்.18

களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவின் குருக்கள்மடம் கிராமத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் நேற்று காலை சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

நான்கு பிள்ளைகளின் தந்தையான இளையதம்பி இலங்கேஸ்வரன் (வயது - 43) (08ஆம் பக்கம் பார்க்க)

### நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராகக் கோஷம் எழுப்பி

# கூட்டமைப்பு எம்.பிக்கள் சபைக்குள் ஆர்ப்பாட்டம்!

### நாடாளுமன்றம் இன்று காலைவரை ஒத்திவைப்பு

கொழும்பு, ஒக்ரோபர் 18

வடக்கு - கிழக்கு மாகாணங்களை வகைசெய்யும் நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் நேற்று நாடாளுமன்றத்தில் கோஷமெழுப்பி ஆர்ப்பாட்டம் நடத்தியதால் நாடாளுமன்றம் இன்றுவரை ஒத்திவைக்கப்பட்டது.

நாடாளுமன்றம் கூடுவதற்கான கோரம் மணி ஒலிக்க ஆரம்பித்தவுடனேயே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள், சபாநாயகர் சபைக்குள் நுழையும் வழியை மறித்தவாறு அமைதியாகக் கீழே அமர்ந்திருந்தனர். 9.30 மணிக்கு சபாநாயகர் சபைக்குள் நுழைவதற்கான பிரதான வாயில் திறக்கப்பட்டது. ஆனால், சபாநாயகர் அவ்வழியாக வரவில்லை. வழமைக்கு மாறாக சபாநாயகர் பின் வழியால் உள்ளே நுழைந்து ஆசனத்தில் அமர்ந்தார்.

செங்கோலையும், படைக்கலச் சேவிதர் பின் வழியால் எடுத்து வந்து அதற்குரிய இடத்தில் வைத்தார்.

சபாநாயகர் சபை நிகழ்வுகளை ஆரம் பிக்கும் முன்னரே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் சபாநாயகருக்கு (08ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு வந்தடைந்த போவர் கொஹோன்னவுடன் நேற்று பேச்சு!

### கிளிநொச்சியில் நாளை தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

கொழும்பு, ஒக்.18

ஜெனிவாவில் நடைபெறவுள்ள அரசு-புலிகள் பேச்சுக்கான நிகழ்ச்சி நிரல் குறித்து இலங்கைக்கான நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் ஜோன் ஹன்சன் போவர் நேற்று அரச சமாதானச் செயலகப் பணிப்பாளர் கலாநிதி பாலித கொஹோன்னவுடன் பேச்சு நடத்தியுள்ளார்.

இப் பேச்சுகள் அரச சமாதான செயலகத்தில் இடம்பெற்றன என்று கலாநிதி பாலித கொஹோன்ன நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

அரசு - புலிகள் பேச்சுகள் திட்டமிட்டபடி இம்மாதம் 28, 29ஆம் திகதிகளில் ஜெனிவாவில் இடம்பெறுமெனவும் அவர் தெரிவித்தார். அரசு - புலிகள் பேச்சுகளில் இடம்பெறவேண்டுமென அரசு கருதும் விடயங்கள் குறித்து இச்சந்திப்பில் போவரிடம் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

(08ஆம் பக்கம் பார்க்க)

## தற்கொலைத் தாக்குதல், விமானக் குண்டுவீச்சு; கண்காணிப்புக் குழுவினர் தீவிரமாக ஆராய்வு

கொழும்பு, ஒக். 18

ஹபரணைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தாக்குதல் மற்றும் கடந்த இரு தினங்களில் வன்னிப்பகுதியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இடம்பெற்ற விமானத் தாக்குதல்கள் குறித்துப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் ஆராய்ந்து வருகின்றனர் என கண்காணிப்புக் குழுப் பேச்சாளர் தொல்பினூர் ஒமர்சன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நேற்று (திங்கள்) ஹபரணைப் பகுதியில் தாக்குதல் நடந்த ஒரு மணிநேரத்திலேயே அங்கு சென்றுவிட்டோம். பின்னர் மேலதிக கண்காணிப்புக் குழுவினரும் மாலையில் அங்கு சென்றனர். அவர்கள் அங்கு தங்கியிருந்து மேலதிக சோதனைகளைச் செய்தனர்.

இதேவேளை, நேற்று (திங்கள்) முல்லைத்தீவில் நடந்த விமானத்தாக்குதல் குறித்தும் இன்று (செவ்வாய்) கிளிநொச்சியில் இடம்பெற்ற விமானத் தாக்குதல் குறித்தும் ஆராய்ந்து வருகின்றோம் - என்று அவர் கூறினார்.

இத்தாக்குதல்களுக்குப் பின்னரும் இம்மாத இறுதியில் நடக்கவுள்ள பேச்சு (08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வடக்கு - கிழக்கு இணைந்திருப்பதா, பிரிந்திருப்பதா?

# மக்களின் அரசியல் தீர்மானமே அன்றி சட்டங்களால் இயற்றப்படும் தீர்வாக முடியாது

### ஈ.பி.டி.பி. அறிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.18

வடக்கும் கிழக்கும் பிரிந்திருப்பதா அல்லது இணைந்திருப்பதா என்பது எமது மக்கள் சுயமாகச் சிந்தித்து எடுக்கவேண்டிய ஓர் அரசியல் தீர்மானம்.

சட்டங்களால் இயற்றப்படும் தீர்மானங்கள் இதற்கு ஒரு போதும் தீர்வாகிவிட முடியாது.

ஈழமக்கள் ஜனநாயக்கட்சி நேற்று விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு வலியுறுத்தி உள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இலங்கைத் தீவின் வடக்கு - கிழக்கு பிரதேசம் என்பது தமிழ் பேசும் மக்களின் தாயக பூமி. எமது முன்னோர்களில் தொடங்கி இன்று வரை பாரம்பரியமாக வாழ்ந்து வரும் எமது வரலாற்று வாழ்விடமான வடக்கும் கிழக்கும் பிரிந்திருப்பதா? அல்லது இணைந்திருப்பதா? என்பது எமது மக்கள் சுயமாக சிந்தித்து எடுக்கவேண்டிய ஓர் அரசியல் தீர்மானம் என்பதில் மாற்றம் இல்லை. சட்டங்களால் இயற்றப்படும் தீர்மானங்கள் இதற்கு ஒரு போதும் தீர்வாகிவிட முடியாது என்பதே ஈ.பி.டி.பியின் அரசியல் கோட்பாடு ஆகும்.

இனமத சமூக பிராந்திய சமத்துவங்களை அடிப்படையாகக் கொண்ட அரசியல் ஏற்பாட்டை விரும்பும் நாம், பல்வேறுபட்ட மன உணர்வுகளுக்கும் இடமளிக்கும் பலமானதும், பாதுகாப்பானதுமான ஒரு நிர்வாக அலகு குறித்த எண்ணங்களையே தொடர்ந்தும் வலி யுறுத்தி வருகின்றோம். வடக்கு-கிழக்கு இணைந்த ஒரே நிர்வாக அலகுக்குள் முஸ்லிம் சகோதர மக்களுக்கான அகச் சுயாதிக்கம் என்பதே ஈ.பி.டி.பியின் அரசியல் நிலைப்பாடாகும்.

**திம்புப் பேச்சுவார்த்தையில்**

1985 இல் திம்பு பேச்சுவார்த்தை மேசையில் தமிழ் பேசும் மக்களின் பன்மைத்துவப் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்டு இலங்கை இந் திய ஒப்பந்தத்திலும் சில மாறுதல்களோடு எழுதப்பட்ட விடயம்தான் வடக்கு -கிழக்கு இணைந்த ஒரே நிர்வாக அலகாகும். இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் கூட வடக்கு கிழக்கில் ஒரு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி அதிலிருந்து பெறப் படும் மக்களின் தீர்மானங்களின் அடிப்படையிலேயே வடக்கு -கிழக்கு இணைப்பு என்பது நிர்ணயிக்கப்பட வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

வடக்குக் கிழக்கெங்கும் தமது சொந்த வாழ்விடங்களில் சுதந்திரமாக மக்கள் வாழ முடியாத இச்சூழலில் இடைவிடாது தொடரும் யுத்தம் என்பது இடப்பெயர்வுகளை தந்து கொண்டிருக்கின்ற இச் சூழலில் தமது சொந்த வாழ்விடங்களில் மக்கள் மீளக்குடியமர்வதற்கு யுத்தம் தடையாக இருக்கும் இந்நிலை யில், சர்வஜன வாக்கெடுப்பிற்கான சுமுகமான ஒரு சூழலும் தற்போது இல்லை என்பதே உண்மையாகும்.

நீதிக்கு தலைவணங்க நாம் ஒரு போதும் மறுப்பதில்லை. ஆனாலும் பரந்துபட்ட மக்களின் வாழ்வுரிமையை தீர்மானிக்கும் இவ் விடயத்தில் மக்களின் கருத்துகளே பிரதானமாகும். எமது கருத்துக்களும் நிலைப்பாடுகளும் கூட பரந்துபட்ட மக்களின் தீர்மானங்களுக்கு உட்பட்டவைகளேயாகும் - என்று உள்ளது.

## வரணியில் மாணவருக்கு இன்று உணவுப்பொருள்

வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாசாலை மாணவர்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் இன்று புதன்கிழமை பகல் 10 மணிக்கு வழங்கப்படும் என பாடசாலை அதிபர் திருமதி ம.குமாரகுலசிங்கம் தெரிவித்துள்ளார். பிள்ளைகளின் பெற்றார் சமுகமளித்து பெற்றுக்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டது. (1-122)

## பருகொலைகள்

**நல்லூரில்**

நல்லூர் ஆலய மேற்கு வீதியில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

நல்லூர் சங்கிலியன் வீதியைச் சேர்ந்த தனியார் வாகன உரிமையாளரான கனகலிங்கம் பாஸ்கரன் (வயது-34) என்பரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.சம்பவ இடத்துக்கு சென்ற யாழ். நீதிவான் இ.த. விக்னராஜா விசாரணைகளை நடத்தி சடலத்தை பிரேத பரிசோதனையின் பின் அவரது மனைவியிடம் கையளிக்குமாறு உத்தரவிட்டார்.

**அன்புவழிபுரத்தில்**

திருகோணமலை,ஒக்.18

திருகோணமலை அன்புவழிபுரத்தில் நேற்று முன்தினம் இரவு தன்னார்வ தொண்டு நிறுவனமான 'நேர்வ்' அமைப்பின் சாரதி இனந்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அதேயிடத்தைச் சேர்ந்த முத்து மோகன் ராஜ் (வயது-24) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவர்.திருகோணமலை நீதிவான் வி.இராமக்கமலன் சம்பவ இடத்தில் விசாரணைகளை மேற்கொண்டார். (1-151)

## மிருசுவில் பகுதியில் ஷெல் தாக்குதல்

மிருசுவில் பகுதியில் கடந்த திங்களன்று பகல் தொடக்கம் வீழ்ந்து வெடித்த எறிகணைகளால் பல குடியிருப்புகளும் பயன்தரு மரங்களும் சேதமடைந்ததாக தெரிவிக்கப்பட்டது.

இப்பகுதியில் மக்கள் ஏற்கனவே வெளியேறியுள்ளதால் உயிர்ச் சேதம் தவிர்க்கப்பட்டதாகவும் - எறிகணைத் தாக்குதல் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளைகளிலும் இடம்பெயராது தங்கியிருந்த மக்கள் அங்கிருந்து வெளியேறி வருவதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

# யாழ்.மாநகரசபைப் பிரிவில் இன்று சிறுவர்களுக்குப் பால்மா விநியோகம்

### ஏனைய பிரதேசங்களில் இவ்வாரத்தில்

யாழ்ப்பாணம்,ஒக்.18

யாழ். அரச அதிபர் மூலம் யாழ். சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் அலுவலகத்திற்கு வழங்கப்பட்ட குழந்தைகளின் பால்மா வகைகள் இன்று புதன்கிழமை தொடக்கம் யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் ஊடாக விநியோகிக்கப்படும்.

இப் பால்மா வகைகள் யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினரால் மாநகரசபையின் எல்லைக்குட்பட்ட ஆரம்ப சிகிச்சை நிலையங்களில் வைத்து ஒன்று தொடக்கம் 3 வயது வரையிலான குழந்தைகளுக்கு வழங்கப்படும் என்று யாழ். மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் தெரிவித்துள்ளார்.

அங்கர் 1+ 172 ரூபாவிற்கும் நெஸ்பிறே 1+ 199 ரூபாவிற்கும் வழங்கப்படவுள்ளன.

இன்று புதன்கிழமை நல்லூர், பாஷையூர், யூபிலி ஆகிய இடங்களிலும்- நாளை வியாழக்கிழமை சுவாமியார்வீதி, வண்ணார் பண்ணை ஆகிய இடங்களிலும்-

மறுநாள் வெள்ளிக்கிழமை குருநகர், கந்தர்மடம், கொட்டடி, நாவலர் றோட், அரியாலை ஆகிய இடங்களிலும் - குழந்தைகள் பால்மா விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளது.

பிள்ளைகளின் குழந்தை வளர்ச்சிப் பதிவேட்டை காட்டி பெற்றோர் பால்மாவைப் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை-

சிறுவர்களுக்கான பால்மா விநியோகம் ஏனைய பிரதேசங்களிலும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளின் தாய் சேய் நல சிகிச்சை நிலையங்களில் வைத்து இவ் வாரத்தில் வழங்கப்படும்- என்று சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

## சமாதானத்துக்கான இறை வேண்டல் வழிபாடு

கல்வியங்காடு, ஒக்.18

குடா நாட்டில் ஏற்பட்டுள்ள யுத்த மேகம் நீங்கவும் நாட்டில் சாந்தி சமாதானம் நிலவ வேண்டியும் சமாதானத்துக்கான இறை வேண்டல் வழிபாடு ஒன்று உடுவில் தென்னிந்திய திருச்சபையில் எதிர்வரும்ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்குநடைபெறவுள்ளது.

சமாதானத்துக்காக ஜெபிக்க அனைத்து தென்னிந்திய திருச்சபை மக்களையும் கலந்து கொள்ளுமாறு உடுவில் தென்னிந்திய திச்சபையின் தலைவர் எஸ். சசீந்திரன் கேட்டுள்ளார். (1-79)

## இதய அஞ்சலிகள்



இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபன பிரதம பாதுகாப்பு அதிகாரியும் யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் குழுமத்தின் உபதலைவருமான திரு.கந்தையா தர்மகுலசிங்கத்தின் பாசமிகு அன்னை

**கந்தையா கனகம்மா**

கனடாவில் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு மிகுந்த துயருறுகின்றோம்.

அன்னையின் பிரிவால் சோகத்தில் ஆழ்ந்துள்ள குடும்பத்தினருக்கு எமது இதயம் நெகிழ்ந்த அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னையின் ஆத்மா சாந்தி அடைவதாக!

நிர்வாகத்தினர், பணியாளர்கள்
உதயன் வெளியீட்டகம்
யாழ்ப்பாணம்.

## யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம் பரிசுத்தினம் -2006

*18.10.2006 புதன் காலை10.30 மணி*

- தலைமை: நயினை எஸ்.சோமேஸ்வரபிள்ளை J.P. B.A.(Cey),Dip. in Ed.(அதிபர்) S.L.P.S. 2.1
- பிரதம விருந்தினர்
திரு.கே.வி.குணசேகரம் B.A.(Cey),Dip. in Ed. & S.L.P.S. 1
(கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்)
- பரிசு வழங்கல்
திருமதி இந்திராதேவி குணசேகரம் அவர்கள்

அனைவரையும் அன்புடன்அழைக்கின்றோம்.

பள்ளிச் சமூகம்.

பிரசுரஅனுசரணை: நாவலர் இன்ஸ்ரிரியூட்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

## சாவகச்சேரியிலும் இன்று பால்மா விநியோகம்

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இன்று தொடக்கம் பால்மா வழங்கப்படவுள்ளது.அங்கர் 1+, நெஸ்பிறே1+ ஆகிய பால்மா பைக்கற்றுக்கள் கட்டுப்பாட்டு விலையில் வழங்கப்படவுள்ளன.

அங்கர் 172ரூபாவுக்கும் நெஸ்பிறே 199 ரூபாவுக்கும் விநியோகிக்கப்படவுள்ளன.

இன்று சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, கைதடி மத்திய மருந்தகம், வரணி மத்திய மருந்தகமும் மகப்பேற்றுமனையும் ஆகிய இடங்களிலும் -

நாளை மிருசுவில் மத்திய மருந்தகத்திலும் பால்மா பைக்கற்றுக்கள் விநியோகிக்கப்படவுள்ளன.ஒரு வயதுக்கும் 3 வயதுக்கும் இடைப்பட்ட குழந்தைகளின் வளர்ச்சி பதிவு அட்டையினை கொண்டு வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

## யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை தரம் 6 அனுமதி.- 2007

*யா/யூனியன் கல்லூரியில் 2007 ஆம் ஆண்டில் தரம் 6 அனுமதிக்கான விண்ணப்பப் படிவங்களை கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.*

1. பாடசாலை நேரத்தில் பாடசாலை அலுவலகம்
2. பி.ப. 3 மணிக்குப் பின்னர்

திரு.இ.நவஜோதீஸ்வரன் ஆசிரியர்
புனித அந்தோனியார் வீதி
(கொமர்ஷல் வங்கி அருகில்)
சுன்னாகம்

விண்ணப்பமுடிவு திகதி- 10.11.2006

அதிபர்.

## மரண அறிவித்தல்

### சிவக்கொழுந்து இரத்தினராஜா

(ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற சுருக்கெழுத்தாளர்)

சிவக்கொழுந்து இரத்தினராஜா நேற்று(17.10.2006) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவக்கொழுந்து - பாக்கியம் தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் சிவராஜா(ஓய்வுபெற்ற நீதிமன்ற சுருக்கெழுத்தாளர்), இராஜேஸ்வரி, யோகராஜா, இசைசோதி, இசைமலர், இராசராணி, Dr.யோகானந்தராசா, காலஞ்சென்ற மோனகராசா, இராஜகுமாரி, இராஜகௌரி ஆகியோரின் தந்தையும் காலஞ்சென்ற சச்சிதானந்தசிவம், காலஞ்சென்ற சிவபாலதாஸ், மனோரஞ்சன், விமலாதேவி, சிங்கராஜா, சாந்தி, தவமணி, தங்கமலர் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று(18.10.2006) புதன்கிழமை பி.ப. ஒரு மணிக்கு சந்தை வீதி, உடுப்பிட்டியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வல்லை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

*'இரத்தினவாசா'*
*சந்தை வீதி,*
*உடுப்பிட்டி.*

தகவல்:
குடும்பத்தினர்

பண்டிகைக்கால விசேட சலுகை

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு எமது நிறுவனத்தில் வெளிநாட்டு அழைப்புகள் அனைத்தும் குறைந்த கட்டணத்தில்

| | |
|---|---|
| ஐரோப்பா, கனடா, அமெரிக்கா நாடுகளுக்கு | - நிமிடத்திற்கு 5/- |
| இந்தியா | - நிமிடத்திற்கு 20/- |
| மலேசியா | - நிமிடத்திற்கு 10/- |
| அரபு நாடுகள் | - நிமிடத்திற்கு 35/- |

மற்றும்
எப்பாகத்திலிருந்தும் எந்த நேரத்திலும் துரித கதியில் பணப்பரிமாற்றம்

WESTERN UNION
Money Transfer

திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
[illegible]
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
தொ.பே. 222 7310

## ஓராண்டு நினைவஞ்சலி

| மண்ணில். | | விண்ணில் |
|---|---|---|
| 08 - 04 - 1927 | | 29 - 10 - 2005 |



**அமரர்**

**நன்னித்தம்பி தம்பு**

திதி: துவாதசி

*அல்லும் பகலும் அயராது பாடுபட்டு*
*பிள்ளைகட்காய் வாழ்ந்த பெருந்தெய்வம் நீர் அன்றோ?*
*ஆண்டொன்று என்ன ஆயிரமே ஆனாலும்*
*உந்தன் நினைவுகளே உள்ளத்தில் வீற்றிருக்கும்*
*உந்தன் கனவுகளை நினைவாக்க நாம் உழைப்போம்.*

வன்னியசிங்கம் வீதி,
தாவடி வடக்கு,
கொக்குவில்.

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கப் படைகளை விரட்டியடிக்க முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டும்

## ஈராக்கிய மக்களுக்கு சதாம் அழைப்பு



பாக்தாத், ஒக். 18

அமெரிக்கப் படைகளை விரட்டியடிக்கும் முழு முயற்சியிலேயே ஈராக்கியர்கள் தங்கள் முழுக்கவனத்தையும் செலுத்த வேண்டும் என்று ஈராக்கின் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைன் கேட்டிருக்கிறார்.

கிளர்ச்சிப் படைகளும், இதர ஈராக்கியர்களும் தமக்குள் சண்டையிட்டு கவனத்தை திசைதிருப்புவதை விடுத்து அமெரிக்கப் படைகளை வெளியேற்றுவதற்காகப் போரிட வேண்டும் என்றும் சதாம் கேட்டுள்ளார்.

கடந்த சனியன்று தனது சட்டத்தரணிக்கு வாய்மொழியாக வழங்கிய கடிதம் ஒன்றில் சதாமின் இந்த வேண்டுகோள் வெளியிடப்பட்டுள்ளது.

தற்போதைய சண்டைகளில் கிளர்ச்சியாளர்கள் அதிகளவு பலத்தைப் பிரயோகிப்பது குறித்து எச்சரிக்கை விடுத்துள்ளார் சதாம்.

ஈராக்கியர்கள் தங்கள் இன, மத பேதங்களைப் புறந்தள்ளிவிட்டு, ஒன்றுபட்ட ஈராக்கிற்காகப் போராட வேண்டும் என்று தனது கடிதத்தில் சதாம் ஹுசைன் குறிப்பிட்டுள்ளார்.

ஈராக்கியர்கள் தங்கள் சரித்திரத்தில் மிகவும் கடினமான காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்றும் சதாம் ஹுசைன் தெரிவித்துள்ளார்.

(ஐ)

## சதாம் ஹுசைன் வழக்கில் நவம்பர் 5 ஆம் திகதி தீர்ப்பு

பாக்தாத், ஒக். 18

சதாம் ஹுசைன் வழக்கில் நவம்பர் 5 ஆம் திகதி தீர்ப்புக் கூறப்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

1982 ஆம் ஆண்டு துஜைல் என்ற கிராமத்தில் 148 ஷியா முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டனர். இந்தக் கொலையைச் செய்தது தொடர்பாக அப்போதைய ஆட்சியாளர் சதாம் ஹுசைன், அவருடைய சகோதரர் பர்சான் அல்டி கிரீதி, முன்னாள் துணை அதிபர் தாஹா யாசின் ரமதான் உட்பட 8 பேர் மீது வழக்கு நடைபெற்று வருகிறது.

இந்த வழக்கின் விசாரணை முடிவடைந்து விட்டதாகவும் - அடுத்த மாதம் இந்த வழக்கிற்கான தீர்ப்பை வழங்க நீதிமன்றம் முடிவு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஒரு குழந்தை பெற்றவர்களுக்கு சீனாவில் நிதியுதவி

பீஜிங்,ஒக் .18

சீனாவில் ஒரு குழந்தைத் திட்டத்தை தீவிரமாக அமுல்படுத்தி 25 ஆண்டுகள் கழிந்த நிலையில் இந்தத் திட்டத்தின் கீழ் ஒரு குழந்தையுடன் நிறுத்திக்கொண்ட பெற்றோருக்கு உதவித்தொகை வழங்க அந்நாட்டு அரசு முடிவு செய்துள்ளது.

உலக மக்கள் தொகையில் முதலிடம் வகித்துவரும் சீனாவில் தற்போது 130 கோடி மக்கள் உள்ளனர். மக்கள் தொகை வளர்ச்சி வேகம் காரணமாக 25 ஆண்டுகளுக்கு முன்பு அதாவது 1979ஆம் ஆண்டில் தீவிர 'குடும்பக் கட்டுப்பாடு' திட்டத்தை சீன அரசு அமுல்படுத்தியது. ஒரு குழந்தைக்குமேல் குழந்தை பெறக்கூடாது என கடுமையான கட்டுப்பாட்டை விதித்தது. ஆனால் இச்சட்டம் பின்னர் தளர்த்தப்பட்டது. குறிப்பாக முதல் குழந்தையாக பெண்குழந்தை பெற்ற விவசாயிகள் அடுத்து ஆண் குழந்தை பெற்றுக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது.

அரசின் திட்டத்தை ஏற்று ஒரு குழந்தையோடு நிறுத்திக்கொண்ட பெற்றோருக்கு அடுத்த ஆண்டு முதல் உதவித்தொகை வழங்க சீன அரசு முடிவு செய்துள்ளது.

# பொருளாதாரத் தடை மூலம் வடகொரியாவைக் கட்டுப்படுத்த முடியாது; நேரடியாக அமெரிக்கா தலையிட்டு அழுத்தம் கொடுக்க வேண்டும்

## புதிய ஐ.நா. செயலர் பான் - கி - மூன் கூறுகிறார்



நியூயோர்க்,ஒக். 18

வடகொரியா மீது பொருளாதார, ஆயுத விநியோகத்தடை விதிப்பதன் மூலம் அந்நாடு தனிமைப் படுத்தப்படும்என்று யாரும் எண்ணக்கூடாது. இதனை சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு ஈரானுடனும் பாகிஸ்தானுடனும் இணைந்து செயற்படும் வாய்ப்புகள் உள்ளன. உலகம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.உலகைப் பேரழிவுக்கு உள்ளாக்கவல்ல அணு ஆயுதங்கள் உற்பத்தி செய்வதற்கும் வாய்ப்புகள் உள்ளன.

அத்துடன் அணு ஆயுதத் தயாரிப்பில் ஈடுபட வேண்டாம் என்று வடகொரியாவிடம் அமெரிக்கா நேரடியாகக் கூறவேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பதவிக்குத் தெரிவாகும் பான் கி மூன் வலியுறுத்தினார்.

ஏ.பி.சி. தொலைக்காட்சிக்கு அளித்த செவ்வியில் இதை அவர் கூறியிருக்கிறார். அவர் அளித்த செவ்வியின் முக்கிய அம்சங்கள் வருமாறு:-

அணு ஆயுதத் தயாரிப்புக்கான கட்டமைப்புகளை அகற்றிவிடுமாறு ஐக்கியநாடுகள் சபையின் பாதுகாப்புச்சபை இயற்றிய பிரேரணையை வடகொரியா ஏற்க மறுத்துவிட்டது துரதிஷ்டவசமானது. நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் உள்ள அம்சங்களை வலியுறுத்தி வடகொரியாவுடன் அமெரிக்கா பேச வேண்டும். இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு வடகொரியாவும், தன்னுடைய அச்சங்களை அமெரிக்காவிடம் தெரிவிக்கவேண்டும்.

சீனாவுக்கு ஆட்சேபம் இருந்தாலும் சனிக்கிழமை நிறைவேற்றிய தீர்மானத்தைப் பாதுகாப்புச்சபை அமுலுக்குக் கொண்டுவரும் என்ற நம்பிக்கை இருக்கிறது. வடகொரியா நடத்திய அணுகுண்டுச் சோதனையானது சர்வதேச அமைதி, பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது.

உலக அரங்கில்

வடகொரியாவின் பிரச்சினை எனக்கு நன்றாகத் தெரியும். எனவே, இப்பிரச்சினைக்கு எளிதில் தீர்வுகாண முடியும். தேவைப்பட்டால் வடகொரியத் தலைவர் களையும் சந்திக்கத் தயாராக இருக்கிறேன்.

தனித்து விடப்படுவதாக வடகொரியா நினைப்பதால் ஈரானுடனும், பாகிஸ்தானுடனும் இணைந்து அது செயற்படும் வாய்ப்புகள் குறித்தும் உலகம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். உலகைப் பேரழிவுக்கு உள்ளாக்கவல்ல அணு ஆயுதங்கள் பெருகுவது நல்லதல்ல - என்றார்.

## ஈரான் ஜனாதிபதி கடும் எதிர்ப்பு

டெஹ்ரான், ஒக். 18

அணு ஆயுதச் சோதனை நடத்தியதற்காக வடகொரியாவுக்கு எதிராக ஐ.நா. பாதுகாப்புச் சபை விதித்துள்ள பொருளாதாரத் தடைக்கு ஈரான் அதிபர் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஈரான் அதிபர் முகமது அஹமட் நிஜாத் கூறினார் என ஈரான் தேசிய தொலைக்காட்சி தெரிவித்ததாவது:-

யுரேனியம் செறிவூட்டுவதை நிறுத்துமாறு ஐ. நா. பாதுகாப்புச் சபை ஈரானை வற்புறுத்துவது சட்ட விரோதமாகும். சில மேற்கத்தேய நாடுகள் தங்களது ஆதிக்கத்தை ஏனைய நாடுகள் மீது செலுத்தும் ஆயுதமாகப் பாதுகாப்புச் சபையைப் பயன்படுத்தி வருகின்றன.

அணு ஆயுதச் சோதனை நடத்தியதற்காக ஒரு நாட்டின் (வடகொரியா) மீது பாதுகாப்புச் சபை பொருளாதாரத் தடை விதித்துள்ளது. இது நிச்சயமாக சர்வதேச அமைதிக்கும் பாதுகாப்பிற்கும் ஊறு விளைவிக்கக் கூடியதாகும்.

அவர்கள் (அமெரிக்கா) ஏனைய நாடுகளை மிரட்டுவதற்காகவே பாதுகாப்புச் சபையைப் பயன்படுத்தி வருகிறார்கள் - என்றார் ஈரான் அதிபர்.


**யாழ். விழிப்புலனற்றோர் சங்கம் கைதடி**

**பிற்போடப்பட்டுள்ளது**

*மேற்படி சங்கத்தால் 16.10.2006 அன்று நடைபெறவிருந்த அதிஷ்டசீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. அதிஷ்டம் பார்க்கப்படும் திகதி பின்னர் பத்திரிகைமூலம் அறியத்தரப்படும்.*

(54465) பொருளாளர்.


## கண்ணீர் அஞ்சலி



*யாழ்.இந்துவின் புகழ் பூத்த மைந்தன்*
*சிறந்த கால்பந்து வீரன்*
*ஓய்வுபெற்ற யாழ். பிரதிக் கல்விப் பணிப்பாளர்*
*யாழ்.இந்து பழைய மாணவர் சங்க நூற்றாண்டு விழாவில் கௌரவிக்கப்பட்ட மூத்த பழைய மாணவன்*
*யாழ்.இந்து பழைய மாணவர் சங்க முன்னாள் உப தலைவருமாகிய*

**சின்னத்தம்பி தியாகராஜா**

*அவர்கள் இறைபதம் எய்தியதையிட்டு அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு கண்ணீர் மல்க எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.*

**- யாழ்.இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்.**

(சி-51176)

## மரண அறிவித்தல்

### கனகசிங்கம் பாஸ்கரன்



சங்கிலியன் வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகசிங்கம் பாஸ்கரன் நேற்று (17.10.2006) செவ்வாய்க்கிழமை அகால மரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*16, சங்கிலியன் வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*

தகவல்:
**தாய்,மனைவி**


**அஸ்வினி மல்ரி பிளாசா**
**Refugee & Humanitarian Visa**

**ஆஸ்திரேலியா, மற்றும் கனடா அரசினால் மனிதநேய அடிப்படையின் கீழ் வழங்கப்படும் நிரந்தர வதிவிட விசா விண்ணப்பப்படிவங்களை பெற்றுக்கொள்ளலாம்.**

**மற்றும் DV-2008 அமெரிக்க லொத்தர் விசாவிற்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.**

**T.P.: 222 5115**

**ராஜா பிளாசா**
**பலாலி வீதி,**
**கோண்டாவில்.**


## தவறிவிட்டது

யோசப் யோகதாஸ் என்பவருடைய தே.அ.அட்டை (451842188V) அல்லைப்பிட்டியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள்: 16/6, மத்தியூஸ் ரோட், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.


**அன்பொளி கல்வி நிலையம்**
சாவகச்சேரி

**தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை 2006 வகுப்புகள் 20.10.2006 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு ஆரம்பமாகும்.**

**தரம் 4 வகுப்புகளும் நடைபெறுகின்றன.**

**- இயக்குநர்.**


## மரண அறிவித்தல்கள்

### திருமதி திருப்பதி சுந்தரம்



உசனைப் பிறப்பிடமாகவும், கிராம்புவில் மேற்கு, கல்வயல், சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திருப்பதி சுந்தரம் நேற்று (17.10.2006) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை-கதிராசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்லையா சுந்தரத்தின் அன்பு மனைவியும் விஜய குமாரி, காலஞ்சென்ற விஜயராசா (குணா) மற்றும் விஜயதாஸ், விஜயகாந்தன் ஆகியோரின் அன்புத் தாயும் செல்வராசா, இந்துமதி (சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை), பாமதி (யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமியும் செல்வகுமாரி (ஆசிரியை, வவுனியா), சிவகுமார், ராஜ்குமார், கேதுஷா, சணுஸ்ஸா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கஜநிதன், கஜநிலானி ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.10.2006) புதன் கிழமை மு.ப.10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கல்வயல்,*
*சாவகச்சேரி.*

தகவல்:
குடும்பத்தினர்.

### செல்லையா நந்தகுமார்

**(உரிமையாளர், K.J கொமினிக்கேசன்)**

டச்சுவீதி, சித்தன்கேணியை வசிப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற செல்லையா (ஆசிரியர்), பாக்கியலட்சுமி (இளைப்பாறிய ஆசிரியை) ஆகியோரின் புத்திரராகிய செல்லையா நந்தகுமார் 16.10.2006 திங்கட்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் சித்தன்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்ட கலாநாயகியின் (ஆசிரியை, யா/மெய்கண்டான் மகாவித்தியாலயம், யா/சைவப்பிரகாச வித்தியாசாலை) அன்புக் கணவரும் கோபினாத், ஜனநாத் ஆகியோரின் அன்புத் தந்தையும் சித்திரா (லண்டன்), சுமித்திரா (லண்டன்), சந்திரா (கொழும்பு) மற்றும் காலஞ்சென்ற கௌரிபாலன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் செல்வச் சந்திரன் (சந்திரன்), செல்வமணி (மணி), சுரேஸ் ஆகியோரின் அன்பு மைத்துனரும் கோபிகா, கேமநாத், ஜனநாத், கஜன், பிரவின், நிஷான் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.10.2006) புதன் கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக நவாலி, வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*டச்சு வீதி, (தெல்லிப்பழை வீதி),*
*சித்தன்கேணி.*

தகவல்:
தாய், மனைவி,பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கைப் பிரிப்பதற்கான நீதிமன்றத் தீர்ப்பு எதிர்பார்த்த ஒன்று

## பி.பி.சி. செய்தியில் சம்பந்தன் எம்.பி. கருத்து

கொழும்பு, ஒக்.18

16 வருடங்களாக இணைந்திருந்த வடக்கு -கிழக்கைப் பிரிப்பதற்கு நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு வியப்பான ஒன்றல்ல. இது தமிழர்களுக்கு எதுவித ஏமாற்றத்தையும் அளிக்கவில்லை.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார். தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் எம்.பி.

நேற்று முன்தினம் இரவு பி.பி.ஸி. தமிழோசைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

18 வருட காலமாக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படாமல் வடக்கு-கிழக்கு இணைப்பு நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது.

அவ்விதமாக இருந்த விடயத்தை, இணைப்பு இல்லை என்ற ஒரு தீர்ப்பை வழங்கவேண்டுமென்று ஜே.வி.பி. சார்பில் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு, இன்று அந்த வழக்கின் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இது எமக்கு ஏமாற்றத்தைத் தருகின்ற ஒரு விடயமாகக் கருதமுடியாது. இந்தத் தீர்ப்பை நாங்கள் எல்லோரும் எதிர்பார்த்திருந்தோம். ஏன் என்றால் தமிழ் தரப்பில் இந்த வழக்கில் ஆஜராகி, இணைப்பின் நியாயத்தை நாங்கள் நீதிமன்றில் முன்வைப்பதற்கு முயற்சி எடுத்தபோது, அதாவது, ஜே.வி.பியினால் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட மூன்று வழக்கிலும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 3 தமிழ் பிரஜைகள் தங்களது நியாயத்தை முன்வைப்பதற்கு எச்சரித்தபொழுது, அதற்கு நீதிமன்றம் இடமளிக்கவில்லை.

அவ்விதமான ஒரு மரபை அவர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்துள்ளார்கள். ஆனபடியால் எங்களுக்கு இந்தத் தீர்ப்பு ஏமாற்றத்தைத் தரவில்லை. ஆனால், இது ஒரு பெரும் அநீதி என்றுதான் நாங்கள் சொல்லவேண்டும்.

இந்தியாவுடன் செய்த ஒப்பந்தத்தை மீறி அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் நிறைவேற்றப்பட்ட சட்டங்களையும் மீறி, இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கின்றது என்றுதான் நாங்கள் கருதுகின்றோம் - என்றார்.(க-12)

## தன்னார்வ நிறுவனங்களின் வாகனங்கள் மீது தாக்குதல்

கொழும்பு, ஒக்.18

குருநாகலையில் செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் ஒன்றும் 'ஒக்ஸ்பாம்' என்ற அரச சார்பற்ற நிறுவன வான் ஒன்றும் தாக்குதலுக்கு இலக்காகின.

குருநாகல, இப்பாகமுவ, யக்கெல்ல சந்தியில் நேற்று மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் வானும், 'ஒக்ஸ்பாம்' நிறுவன வானும் பலத்த சேதத்துக்குள்ளாகியது. இச்சம்பவத்தில் எவரும் காயமடையவில்லை. இச்சம்பவம் தொடர்பாக ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். ஹபரணயில் படையினர் கொல்லப்பட்டதன் எதிரொலியாகவே இச்சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது. (க)

# கிழக்கு மக்களுக்கு வெற்றி புலிகளுக்குப் படுதோல்வி!

## நீதிமன்றத் தீர்ப்பு குறித்து ஜே.வி.பி. பெருமிதம்

கொழும்பு,ஒக்.18

''வடக்கு - கிழக்கு இணைப்புக்கு எதிரான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு, கிழக்கு மக்களுக்குக் கிடைத்த வெற்றியும், புலிகளுக்குக் கிடைத்த படுதோல்வியுமாகும். இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கைக்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கும் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின் மூலம் இலங்கைக்கும், இந்தியாவுக்குமிடையிலான சினேகபூர்வ மற்றும் இராஜதந்திர உறவுகள் எவ்விதத்திலும் பாதிக்கப்படமாட்டா.''

- இவ்வாறு ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், நேற்று உதயனுக்குத் தெரிவித்தார். வடக்கு - கிழக்கு இணைப்பு விவகாரத்தில் திங்களன்று உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக் குறித்து கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியதாவது,

''வடக்கு - கிழக்கு இணைப்புக்கு எதிராக உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு, கிழக்கு மாகாணத்தின் மக்களுக்குக் கிடைத்த வெற்றியாகும். அதேபோல், இது புலிகளுக்குக் கிடைத்த படுதோல்வி யாகும். வரலாற்றில் எடுக்கப்பட்ட தவறான தீர்மானத்தினால் மக்களுக் குக் கிடைக்க வேண்டிய ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்டன. அத்துடன், வடக்கு - கிழக்கை ஒன்றாக எடுத்து பிரிப்பதற்காக புலிகள் உத்தேசித்திருந்த திட்டமும் தோல்வியடைந்துள்ளது.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின்படியே வடக்கு - கிழக்கு இணைக்கப்பட்டது. ஆனால், அந்த ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பல தீர்மானங்கள் இப்போது அமுலில் இல்லை. பலவற்றில் மாற்றங்கள் எற்பட்டுள்ளன. எனவே, இப்போது புதியதொரு நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையில் உயர் நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு இலங்கை. இந்திய நாடுகளின் உறவுகளை எந்த வகையிலும் பாதிக்ககாது.''

- இவ்வாறு மேலும் கூறினார் விஜிர ஹேரத் எம்.பி. (த)

# வடக்கு - கிழக்கு பிரிக்கப்பட்ட நிலையில் முஸ்லிம்களின் தனித்துவம் பேணப்படும்

## மு.கா. தலைவர் ஹக்கீம் கருத்து

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரம் இலங்கையின் வடக்கும், கிழக்கும் பிரிக்கப்பட்டிருக்கும் சூழ்நிலையில் ஏற்படக்கூடிய புதிய அரசியல், சமூக, பொருளாதார, பாதுகாப்பு நிலைமைகளை எதிர்கொள்ளும் வகையில் வடக்கு - கிழக்கில் வாழும் பெரும்பான்மை முஸ்லிம்களினால் நமது கட்சிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகபட்ச ஆணைக்கு அமைவாக முஸ்லிம் மக்களின் அரசியல் வழித்தடத்தை அமைப்பதில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் திடமுடன் செயற்படும் என்றும், தற்போது ஏற்பட்டுள்ள புதிய சூழ்நிலைகளை ஆராய்ந்து நடவடிக்கைகள் எடுப்பது தொடர்பாக கட்சியின் அதியுயர்பீடத்தை அவசரமாகக் கூட்டுவதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது என்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியத் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

உயர் நீதிமன்றத்தினால் வடக்கு - கிழக்கு இணைப்பு தொடர்பாக வழங்கப்பட்டுள்ள தீர்ப்பையடுத்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமினால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் மூலம் 1987ஆம் ஆண்டு வடக்கு - கிழக்கு மாகாணங்கள் ஒருவருட காலத்துக்குள் கிழக்கில் நடத்தப்படும் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் நிரந்தரமாக இணைக்கப்படும் வரை தற்காலிகமாக இணைக்கப்பட்டது.

கடந்த 1987ஆம் ஆண்டு தொடக்கம் 2006ஆம் ஆண்டு வரை ஜனாதிபதிகளாக அதிகாரத்திலிருந்த காலஞ்சென்ற ஜே.ஆர். ஜயவர்த்தன, காலஞ்சென்ற ஆர்.பிரேமதாஸ மற்றும் டீ.பீ. விஜேதுங்க, சந்திரிகா குமாரதுங்க ஆகியோரால் வர்த்தமானிப் பிரகடனங்கள் மூலம் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் நடத்தப்பட வேண்டி இருந்த சர்வஜன வாக்கெடுப்பு பலமுறை ஒத்தி வைக்கப்பட்டு சுமார் 19 வருடங்களாக தற்காலிக இணைப்பு தொடர்ந்து வந்திருக்கிறது.

வடக்கு - கிழக்கு இணைப்புத் தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் வலிதற்றது என இன்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதன் மூலம் இலங்கையின் வடக்கும் - கிழக்கும் இரண்டு மாகாணங்களாக தனித்து இயங்கும் நிலையிலுள்ளது.

கிழக்கு மாகாணம் முஸ்லிம் மக்களின் அதிகூடிய செறிவைக் கொண்ட மாகாணம் என்ற வகையிலும், அம்மக்களின் பெரும்பான்மை ஆணையைப் பெற்ற கட்சி என்ற வகையிலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இவ்விடயத்தில் அதிக கரிசனையை செலுத்துகிறது.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் 1987ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்டபோது இலங்கை முஸ்லிம்களிடம் எந்தவிதமான அபிப்பிராயமும் அன்று கோரப்படவில்லை. இவ்வாறே தான் வடக்கு கிழக்கு பிரிப்பும் நீதிமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சூழ்நிலைகள் எவ்வாறு மாற்றமடைந்தபோதிலும் வடக்கு - கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களது அரசியல் அபிலாஷைகளை அடைந்துகொள்ளும் போராட்டத்தில் ஸ்ரீலங்கா காங்கிரஸ் வழமைபோல தீவிரமாக செயற்படத் தயாராகவுள்ளது. - இவ்வாறு அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நீதிமன்றப் பதிவாளருக்கு பதவி உயர்வு

யாழ்ப்பாணம்,ஒக்.18

நீதிமன்றப் பதிவாளர் சேவை தரம் II இற்கு 4 நீதிமன்றப் பதிவாளர்கள் பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

01.10.2006ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வண்ணம் நீதிச்சேவை ஆணைக்குழுவால் இப்பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த ஜூலை மாதம் கொழும்பு நீதிச்சேவை ஆணைக்குழு அலுவலகத்தில் நடை பெற்ற நேர்முகப் பரீட்சையின் அடிப்படையிலேயே இப்பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

திருகோணமலை நீதிவான் நீதிமன்றப் பதிவாளர் கே.தர்மகுலராஜா அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்றத்திற்கும், யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றப் பதிவாளர் கே.மீரா, பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றப் பதிவாளர் வீ.மார்க்கண்டு ஆகியோர் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்திற்கும், சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றப் பதிவாளர் எஸ்.விக்னேஸ்வர மூர்த்தி பருத்தித்துறை நீதிமன்றத்திற்கும் பதவி உயர்வு பெற்றுள்ளனர். (202)


### தவறிவிட்டது

கந்தசாமிகோயிலடி, கெருடாவில் தெற்கு, தொண்டைமானாறை முகவரியாகக் கொண்ட அருமைச்சந்திரன் அஜந்தினி என்பவருடைய தே.அ.அ. (இல.-806813940V) வல்லைக்கும் பருத்தித்துறைக்குமிடையில் பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இ.துரைராசா, கோணாவளை, கெருடாவில் கிழக்கு, தொண்டைமானாறு என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும், தகுந்த சன்மானம் வழங்கப்படும். (51175)



### பாலன் மில்ஸ்

தேங்காய்எண்ணெய், இலுப்பெண்ணெய், நல்லெண்ணெய்(எள்) போன்ற (3கிலோவிலிருந்து ஆயிரம் கிலோ வரை) எண்ணெய் வகைகளை நவீன இயந்திரத்தில் வடித்துக்கொள்ள உடன் நாடவேண்டிய இடம்.

''பாலன் மில்ஸ்''
மாவடிச்சந்தி - வட்டுக்கோட்டை.
கஜலக்சுமி அரிசி ஆலை,
வட்டுக்கோட்டை.
T.P:0602212624
(54331)



COMPUTER EXPRESS
Institute of Information Technology
இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
021-222 8250,0777- 222422

ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

**Diploma in Hardware Engineering**
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault Finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking Etc..
Course Fee :2000/=

**Diploma in Video Mixing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter.
Course Fee :3000/=

**Diploma in Graphic Designing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Corel Draw ❖ Cool3D Studio ❖ Micro media Flash MX
Course Fee :2000/=

ஒரே நாளில் ஆரம்பம்:- 23/10/2006 - 08.30am


### 45ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 25 - 08 - 1965
மறைவு 04 - 09 - 2006

**அமரர் முத்துத்தம்பி ஜெகநாதன் (மோகன்)**

*எங்கள் குடும்ப விளக்கு அணைந்தாலும்*
*எங்கள் நெஞ்சை விட்டு அகலாது - என்றும்*
*பிரகாசித்துக் கொண்டிருக்கும் எங்கள் தெய்வமே.*

சபாபதிப்பிள்ளை முகாம்,
தொட்டியாலடி, சுன்னாகம்.

ராஜேஸ்வரி (மனைவி - ராசாத்தி),
உற்றார், உறவினர்.

(54449)

### 45ஆம் நாள் நினைவு தினம்



மண்ணில் 27 - 12 - 1975
விண்ணில் 04 - 09 - 2006

**சுந்தரமூர்த்தி பாஸ்கரன்**
(மெக்கானிக் ராஜன்)

விடிந்திடும் பொழுது எல்லாம்
விடிந்திடாப் பொழுதுமாக
முடிந்த நல் வாழ்வதோடு
முடிந்ததெம் அமைதி எல்லாம்
மடிந்திடச் சூடு பட்டு
மடிந்தவர் பாஸ்க ரன்நீர்
வடிந்திடும் கண்ணீர் மாற்ற
வடிவெடுத் தோடி வாரீர்.

இன்று (18.10.2006) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

430, ஸ்ரான்லி வீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(54445)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவகத்திலிருந்து இடம்பெயர்ந்த 400 மாணவர் கல்வி பெறமுடியாத நிலை!

## தீவக த.ஆ.சங்கத் தலைவர் கவலை

மண்டைதீவு,ஒக்.18

அசாதாரண சூழ்நிலை காரணமாக தீவகத்திலிருந்து இடம்பெயர்ந்துள்ள சுமார் 400 மாணவர்கள் இன்னமும் பாடசாலைகளுக்குச் செல்லாமலிருப்பதாக தீவக தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் கவலை தெரிவித்துள்ளார்.

குடாநாட்டுப் பாடசாலைகள் கடந்த வாரம் முதல் முழு அளவில் இயங்க ஆரம்பித்துள்ள போதிலும் அசாதாரண சூழ்நிலை காரணமாக தீவகத்திலிருந்து இடம்பெயர்ந்த மாணவ, மாணவியர் தமது பெற்றோருடன் தற்காலிக முகாம்களில் தங்கியுள்ளனர். இவர்களில் சுமார் 400 பேர் மீண்டும் தமது பாடசாலைக்குத் திரும்பி கல்வியைத் தொடரமுடியாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் தங்கியுள்ள பகுதியின் அயல் பாடசாலைகளில் தற்காலிகமாக சேர்த்துக் கொள்ள வசதி இருப்பதாகவும் அந்தப் பாடசாலை அதிபர்களுடன் தொடர்புகொண்டு மாணவர்களை சேர்ப்பது பெற்றோரது கடமையாகும் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

அல்லைப்பிட்டி, மண்டைதீவு போன்ற கிராமங்களைச் சேர்ந்த மாணவர்களே தமது கல்வியைத் தொடரும் வாய்ப்பை இழந்துள்ளனர். நாவாந்துறை தேவாலயத்தில் 50 இற்கு மேற்பட்ட மாணவர்களும் யாழ். அடைக்கல மாதா தேவாலய வளாகத்தில் 300 இற்கு மேற்பட்ட மாணவர்களும் தங்கி உள்ளனர்.

பொதுக் கல்வி சாதாரணதரப் பரீட்சை ஆரம்பிக்க இன்னும் இரண்டு மாதங்களே உள்ளன. இம்மாணவர்களுக்கு இடம் கொடுப்பது தொடர்பாக நாவலர் மற் றும் துரையப்பா வித்தியாலய அதிபர்களு டன் தொடர்புகொண்டிருப்பதாக தீவக தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் மேலும் தெரி வித்தார்.

(ப-88)

# வாராந்தச் சொற்பொழிவு

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30மணிக்கு ''பெரிய புராணம்'' தொடர் சொற்பொழிவு இடம்பெறும்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ் விரிவுரையாளர் அ.குமாரவேல் இச் சொற்பொழிவை நிகழ்த்துவார். (173-202)

# 'தேடல்' போட்டி பிற்போடப்பட்டது

யாழ்.நகர் மைய றோட்டறக்ட் கழகம் நடத்தும் 'தேடல்' பொது அறிவு, நுண்ணறிவு பரீட்சைக்கான விடைத்தாள் ஏற்றுக்கொள்ளும் முடிவு திகதி அடுத்தமாதம் 10 ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளது.

அனைத்து பாடசாலை மாணவர்களும் அடுத்த மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் வினாத்தாளில் குறிக்கப்பட்ட முகவரிக்கு விடைத்தாளினை அனுப்பிவைக்குமாறு திட்ட இயக்குநர் கேட்டுக்கொண்டுள்ளார். (1)

# மிருசுவில் வடக்கில் மூன்று சடலங்கள் தோண்டி எடுத்துப் பிரேத பரிசோதனை

தென்மராட்சி, ஒக்.18

மிருசுவில் வடக்குப் பகுதியில் கடந்த ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களில் பலியான மூவரின் சடலங்கள் கடந்த ஞாயிற்றுக் கிழமை தோண்டி எடுக்கப்பட்டு பிரேத பரிசோதனை நடாத்தப்பட்டது.

சாவகச்சேரி நீதிவான், மற்றும் யாழ். போதனா மருத்துவமனை சட்ட மருத்துவ அதிகாரி மருத்துவர் கே. பாலசுப்பிரமணியம், கொடிகாமம் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி, அப்பகுதி படை முகாம்களின் பொறுப்பதிகாரிகள் ஆகியோர் முன்னிலையில் மிருசுவில் பெரியானோடை மயானத்தில் சடலங்கள் தோண்டி எடுக்கப் பட்டன.

கடந்த ஓகஸ்ட் 14ஆம் திகதி மிருசுவில் பெரியானோடையில் பலியான மிருசுவில் வடக்கைச் சேர்ந்த வேலாயுதம் கிருபாகரன் (வயது-22) கடந்த ஓகஸ்ட் 16 ஆம் திகதி பலியான மிருசுவில் மன்னங்குறிச்சியைச் சேர்ந்த நாதன் நடராசா (வயது-57), கடந்த மாதம் ஒன்பதாம் திகதி பலியான சண்முகம் சசிக்குமார் (வயது-33) ஆகியோரின் சடலங்களே தோண்டி எடுக்கப் பட்டன.

மூன்று சடலங்களும் உறவினர்களால் அடையாளம் காணப்பட்டதையடுத்து பிரேத பரிசோதனை நடத்தப்பட்டது.

மூன்று சடலங்களிலும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன. பிரேத பரிசேதனையின் பின்னர் உறவினர்களின் வேண்டுகோளின் பிரகாரம் அதே மயானத்தில் சமய முறைப்படி சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டன.

அண்மைய யுத்த அனர்த்த வேளையில் பலியானவர்களில் இதுவரை 11 பேரின் சடலங்கள் நீதிவான் முன்னிலையில் தோண்டி எடுக்கப்பட்டு விசாரணைகள் நடத்தப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

## தென்மராட்சி மாணவர்கள்

# இடம்பெயர்ந்த இடத்திலேயே கல்வியைத் தொடர ஏற்பாடு

தென்மராட்சி,ஒக்.18

அசாதாரண சூழ்நிலையால் இடம் பெயர்ந்த தென்மராட்சிப் பிரதேச மாணவர்கள் தாம் தற்போது தங்கியுள்ள பிரதேச பாடசாலைகளிலேயே இணைந்து கல்வியைத் தொடர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை தென்மராட்சிக் கல்வி வலயம் மேற்கொண்டுள்ளது.

தற்போதைய அசாதாரண நிலைமை வழமைக்குத் திரும்பி மக்கள் தத்தம் பகுதியில் மீளக்குடியமரும்வரை தற்போது தங்கியுள்ள பிரதேசத்தின் பாடசாலைகளில் கல்வியை மாணவர்கள் தொடரமுடியும் என தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார். (202)

# கிராமிய பால் உற்பத்திக்கு யு.என்.டி.பி. அனுசரணை

வலி.தென்மேற்கு,ஒக்.18

ஐக்கியநாடுகள் அபிவிருத்தித் திட்டப் பிரிவின் (UNDP) பாற்பண்ணை கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பாற்பண்ணை அமைப்பதற்கு சண்டிலிப்பாய் வடக்கு(ஜே/141) கிராம அலுவலர் பிரிவு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

வலி.தென்மேற்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் ஆரம்பிக்கப்படவுள்ள இப்பாற்பண்ணையின் பால் உற்பத்தியாளர்களாக இருபது பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே இக்கிராமத்தில் பால் உற்பத்தியில் ஈடுபட்டு வந்தவர்களான இப்பயனாளிகளுக்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டப் பிரிவு 20 பசுமாடுகளை கொள்வனவு செய்து விரைவில் வழங்கவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ப-135)

# திருமுறை முற்றோதல்

யாழ்ப்பாணம்,ஒக்.17

அகில இலங்கை திருமுறை மன்றத்தினர் குடாநாட்டு ஆலயங்களில் நாயன்மார்களை எழுந்தருளச் செய்து மாதம் ஒரு கோயில் மாதம் ஒரு திருமுறை முற்றோதல் என பன்னிரு திருமுறை முற்றோதி வருகின்றனர்.

அந்த வகையில் நேற்று திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் ஆறாந்திருமுறை திருத்தாண்டவ முற்றோதல் இடம்பெற்றது.

இன்று காலை 8 மணியளவில் ஆலய பூசையைத் தொடர்ந்து நாயன்மார் நால்வர் பன்னிரு திருமுறைச் சுவடிகளுடன் உலா சென்று யாழ். பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலயத்தில் எழுந்தருளுவார்.

தொடர்ந்து விசேட பூசைகளும் இடம் பெறும். (203)

# எங்கும், எவற்றுக்கும் கியூ, கியூ... கியூவே காட்சி!

நல்லூர்,ஒக்.18

உணவுப்பொருள்கள் உட்பட அத்தியாவசியப் பொருள்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால், மக்கள் அவற்றை வாங்குவதற்காக அலைந்து திரிந்து, வர்த்தக நிலையங்களில் வரிசையில் நின்று கஷ்டப்படுகிறார்கள்!

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளிலும் நாளாந்தம் நீண்ட வரிசைகளைக் காணமுடிகின்றது.

பொருள்களை எங்கெங்கே வாங்க முடியும் என்பதை மணந்து பிடித்து அல்லது மற்றவர்கள் மூலம் அறிந்து ஓடி ஓடித் திரிந்து வரிசையில் நிற்கிறார்கள்.

வரிசைகளில் உணவு மற்றும் அத்தியாவசிய பாவனைப் பொருள்களுக்கு மட்டுமே 'கியூக்கள்' தோன்றுகின்றன என்பதல்ல. மதுபான விற்பனை நிலையங்களிலும் ஏழு மணி முதலே மதுபானப் பிரியர்கள் நீண்ட வரிசையில் நிற்பதைக் காணமுடிகின்றது!

அவர்கள் மட்டுமா? '.பெயர் அன்ட் லவ்லி' போன்ற அழகு சாதனப் பொருள்கள் மற்றும் வாசனைத் திரவியங்களை வாங்குவதற்காகவும் நகரப்பகுதிக் கடைகளின் முன்னாள் வாடிக்கையாளர்கள் நீண்ட வரிசையில் நிற்பதனை நேற்றுமுன்தினம் காண முடிந்தது. !!

(அ-111)

# மீள்பிடியியல் கற்கைநெறி: தெரிவான 60 பேர் விவரம்

யாழ்.பல்கலைக்கழகத்தின் 2006 ஆம் ஆண்டுக்கான மீன்பிடியியல் டிப்ளோமா கற்கைநெறிக்கு 60 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் தமது பதிவுகளை உடனடியாக யாழ்.பல்கலைக்கழக அனுமதிகள் கிளையில் மேற்கொள்ளுமாறு பதிவாளர் தெரிவித்துள்ளார். தெரிவுசெய்யப்பட்டோர் விவரம் வருமாறு:-

நா.அனுஷகுமார், ச.சர்மிளா, த.தயாபரன், பா.சானுஜன், ம.மஞ்சுளா, யோ.சிவதயாளினி, ம.ரேகா, ப.விஜயதீபன், ம.ரஜீதா, பூ.செந்தூரன், ஆ.பிரசாந்தன், பொ.சாரங்கன், சோ.சஞ்ஜீவன், த.அஜந்ததாசன், யோ.அரவிந்தன், ந.அனந்தனன், அ.அமர்தவர்சினி, இ.சாந்திசுதன், ஸ்ரீ.ரஞ்சினிதேவி, கு.சுதாகர், ஸ்.அனுஸ்மன், து.சஜாதா, பாதாரணி, கை.ஜெயநேசன், ம.விஜிதா,செ.தர்சினி, தி.காஜத்திரி, சி.இராஜலக்சுமி, த.ஜெயந்தன், ம.கிருபானந்தன், ச.விமலராஜன், ந.நவநீதன், ச.மகிந்தா, த.கஜானா, சி.கலைவாணி, த.ரதீஸ்வரன், த.சிவாஜினி, க.ஜெயரூபன், ர.லக்சி, கு.மதனராஜ், ஜெ.மேகலதா, கு.நிஷாந்தினி, ம.ஜெமோஸ்லீன், இ.செந்தீபா, சி.கஜேந்திரநாதன், அ.அருந்தவராஜன், செ.சொரூபன், ஸ்ரீ.மகிழினி, பா.முகுந்தினி, செ.சங்கீதா, ஸ்.மேரி மொறீனா, த.தயாளன்,நா.ரமேஸ், சி.அருள்மேரி, ஜெ.வதனா, க.ஸ்ரீஸ்கந்தரூபமணி, இ.நிர்மலா, தே.தீவன், ச.மேரிதமிழினி, ஜே.சர்மிளன். (203)

# நூல்வெளியீட்டு விழா

ஈழத்து நவீன இலக்கியப் படைப்பாளி குப்பிழான் ஐ.சண்முகனின் 'உதிரிகளும்...' சிறுகதைத் தொகுப்பின் வெளியீட்டு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நெல்லியடி ம.ம.வி. மண்டபத்தில் நடைபெறவுள்ளது. வித்தியாலய அதிபர் செ.சேதுராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் நூலுக்கான மதிப்பீட்டுரைகளை எழுத்தாளர்களாக ஐ.ஜபார், ச.இராகவன் ஆகியோர் நிகழ்த்துவர். (202)

# அறநெறிப் பாடசாலை பரீட்சை பெறுபேறுகள் வெளியாகின

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட ஆண்டு நிதிப் பரீட்சைப் பெறுபேறுவர்கள் வெளியாகியுள்ளன.

பாடசாலையை விட்டு விலகிய மாணவர்கள் பொறுப்பாசிரியர் பி.ராகுலனு டன் தொடர்புகொண்டு சான்றிதழைப் பெற்றுக் கொள்ளுமாறு பாடசாலை அதிபர் கா.கணேசதாசன் கேட்டுள்ளார். (202-90)

# நகரில் தீபாவளி வியாபாரம் சோபை இழந்த நிலையில்

அரியாலை,ஒக்.18

தற்போதைய அசாதாரண சூழ்நிலைகாரணமாக யாழ்.நகரில் தீபாவளி வியாபாரம் இம்முறை களைகட்டவில்லை.

குடாநாட்டில் அத்தியாவசியப் பொருள்களுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவுவதால் மக்கள் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் பொருள்களை கொள்வனவு செய்வதிலேயே அதிக கவனம் செலுத்தியிருப்பதால் தீபாவளி வியாபாரம் சோபை இழந்த நிலையில் காணப்படுகிறது.

நாளாந்தம் தொழில்செய்து குடும்ப வாழ்க்கை நடத்தி வரும் பெரும் எண்ணிக்கையான குடும்பங்கள் சங்கக் கிளைகளில் பங்கீட்டு அட்டைக்கு விநியோகிக்கப்படும் பொருள்களை பெறுவதிலேயே முழு அளவில் ஆர்வம் காட்டுகின்றார்கள்.

இந்தநிலையில் குடாநாட்டில் இம் முறை தீபாவளி கொண்டாட்ட வியாபாரம் சோபை இழந்து காணப்படுகின்றது. (1-17)

# நகரப் பகுதியில் கடைகளை படையினர் திறந்துள்ளனர்

## மக்கள் 'கியூ'வில் பொருள் கொள்வனவு

யாழ்ப்பாணம்,ஒக்.18

யாழ்.நகரின் பல்வேறு பகுதிகளிலும் பொதுமக்களுக்கு இராணுவத்தினரால் கட்டுப்பாட்டு விலையில் உணவுப் பொருள்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

பிரதான வீதியின் பஸ்ரியன் சந்திப் பகுதியில் உள்ள சிறிய கட்டடம், பிரதான வீதியின் செபஸ்ரியான் சந்தியிலுள்ள பழைய ச.தொ.ச. கட்டடம், ஆஸ்பத்திரி வீதியில் சிவில் நிர்வாக அலுவலகத்திற்கு முன்னாலுள்ள கடை ஆகிய இடங்களில் வைத்து இராணுவத்தினர் உணவுப் பொருள்களை விற்பனை செய்வதைக் காணமுடிகின்றது.

அரிசி,மா,சீனி, பருப்பு போன்ற அத்தியாவசிப் பொருள்களுடன் நுளம்புத்திரியும் கட்டுப்பாட்டு விலைகளில் விற்கப்பட்டன.

ஆயிரக்கணக்கான மக்கள் வரிசை யில் காத்து நின்று பொருள்களை வாங்கிச் செல்வதைக் காணக்கூடியதாக இருந்தது.

(202-88-111)

# கல்வியங்காடு சந்தை கட்டடவேலை சிமெந்து இல்லாததால் முடக்கம்

நல்லூர்,ஒக்.18

கல்வியங்காடு சந்தைப் பகுதியில் புதிய கட்டடங்களை அமைப்பதற்கு அத்திபாரம் வெட்டப்பட்ட நிலையில் சிமெந்து இல்லாமையால் வேலைகளை ஆரம்பிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு கவலை [illegible] மாநகர ஆணையாளர் [illegible]

மழைகாலம் ஆரம்பித்துள்ள நிலையில் அத்திபாரம் அமைக்காதுவிட்டால் அதற்கென வெட்டப்பட்ட குழியில் நீர் தேங்கும் நிலைமை ஏற்படும்.

இவ்வாறான நிலைமைகள் காரணமாக அத்திபாரம் போடுவதற்குத் தேவையான சிமெந்தைப் பெற்றுக்கொள்ள அரச அதிபரின் உதவியை நாடவுள்ளோம் என்று ஆணையாளர் [illegible] தெரிவித்தார்.

(203-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு-கிழக்குப் பிரிப்புத் தீர்ப்பு இந்தியாவுக்கு வழங்கப்பட்ட பரிசு

## மனோ கணேசன் எம்.பி. கூறுகிறார்

"வடக்கு - கிழக்கு பிரிக்கப்படுவது இந்தியப் பேரரசிற்கு இலங்கையின் சிங்கள, பௌத்த பேரினவாதிகள் வழங்கியுள்ள பரிசாகும்."

- இவ்வாறு மேலக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-

வடக்கு - கிழக்கைப் பிரிக்கும் மனு மீதான தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. கடந்த 18 வருடகலா தற்காலிக இணைப்பு இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் மூலமாகவே பெறப்பட்டதாகும். இலங்கையிலே தமிழர்களை இந்தத் தீர்ப்பு அதிர்க்குள்ளாக்கியிருக்கும் என நான் நினைக்கவில்லை. தமிழர்களுக்கு நியாயம் வழங்கிடும் கடந்தகால பண்டா-செல்வா, டட்லி-செல்வா ஒப்பந்த முயற்சிகள்கூட வன்முறைகளால் தடுத்து நிறுத்திய பேரினவாதிகள், தற்போது சட்டத்தின் மூலம் அதே முயற்சிகளை முன்னெடுக்கின்றனர்.

ஆழிப்பேரலை நிவாரண சபைக்கும் தற்போது வடக்கு - கிழக்கு இணைப்பிற்கும் இதே கதியே ஏற்ட்டுள்ளது. எனவே, இது இலங்கையிலே தமிழர்களுக்கும், தமிழர்களுடன் அதிகாரங்களை சமமாகப் பிரித்துக் கொள்ள விரும்பும் சக்திகளுக்கும் ஏற்படுத்தும் பாதிப்பு என்பதைவிட இந்தியப் பேரரசின் முகத்தில் விழுந்த அடியென எண்ணுகின்றேன்.

இந்தியா இதையும் வழமைபோல் கண்டுகொள்ளாமல் புறந்தள்ளிவிடுமா? அல்லது தனது செல்வாக்கையும், அரசியல் அக்களையையும் வெளிப் படுத்துமா? என்ற கேள்வி இன்று எழுந்துள்ளது.

- எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

### மாறுபாடான விலைகளில் சிமெந்து விற்பனை

நவாலி,ஒக்.18

நவாலி ஆனைக்கோட்டை மானிப்பாய் பகுதி வர்த்தக நிலையங்களில் மாறுபட்ட விலைகளில் சிமெந்து விற்பனை செய்யப்பட்டு வருவதாக மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

ஓரிடத்தில் ஆயிரத்து ஐம்பது, ரூபாவாகவும், மற்றொரு இடத்தில் தொளாயிரத்து ஐம்பது ரூபாவாகவும் இன்னோர் இடத்தில் தொளாயிரத்து முப்பது ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகிறது.

(ப-100)

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தின் J/95 அரியாலை மத்தி கிராம அலுவவலராக கடமையாற்றிய

**மார்க்கண்டு மகேந்திரன்**

அவர்களின் அகால மரணமடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சி யடைந்துள்ளோம். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த கவலைகளைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

*பிரதேச செயலக நலன்புரிச்சங்கம், நல்லூர்.*

பிரதேச செயலரும் உத்தியோகத்தர்களும்.

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 18 - 03 - 1958



மறைவு 16 - 10 - 2006

### அமரர் மார்க்கண்டு மகேந்திரன்

(கிராம உத்தியோகத்தர் - யா/95 அரியாலை மத்தி, நல்லூர் பிரதேச செயலகம்)

*கிராம உத்தியோகத்தர் சேவையில் 1994இல் இணைந்து கொண்ட மகேந்திரன் 12 வருடங்களில் பழகும் சகலரிடம் பண்பாகவும் பணிவாகவும் பழகி வந்தவர். மனிதப் பிறப்பில் மரணம் ஒரு நாள் வருவது நியதியே! 48 வயதில் இயற்கைக்கு மாறாக ஏற் பட்ட மரணத்தினால் எம்மவர்கள் அதிர்ச்சியில் ஆழ்ந்துள்ளோம்.*

அன்னாரின் மறைவினால் துயருறும் குடும்ப உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து, அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாண மாவட்ட
கிராம உத்தியோகத்தர் சங்கம்.

## 6ஆம் மாத நினைவஞ்சலி

அன்னை மடியில் 30 - 11 - 1979



இறைவன் அடியில் 18 - 04 - 2006

### றெஜினோல்ட் றொசான் பாலச்சந்திரன்

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டி நிற்கிறோம்.

*இல.35, இலந்தைக்குளம் வீதி, கொழும்புத்துறை.* (54440)

*உங்கள் பிரிவால் துயருறும்* குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### *கந்தவனம் அல்பிறெட் (இராஜன்)*



ஏழாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தவனம் அல்பிறெட் 17.10.2006 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் இராசா கந்தவனம் - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் மேரிகிறேஸ் அற்புதராணியின் அன்புக்கணவரும் சர்மிலா, சறோன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் செபஸ்ரியன் மேரிறோசலினின் அன்பு மருமகனும் இம்மானுவேல்(கனடா), லோறன்ஸ், பத்மாவதி, மரியதிரேசா(கனடா), போலானந்தம்(கனடா), மரிய அன்ரன்(கனடா), மரியலொறேற்ரோ(கிரி), யூட்விஜயராஜா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜோன்பிள்ளை, துரைசிங்கம்(கனடா), சுரேஸ்(கனடா), தேவி(கனடா) பிறேமா, றஞ்சி(கனடா), சுசி (கனடா), பூவா(கனடா), ஜெயக்குமார் ஆகியோரின் பாசமிகு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை கனடாவில் நடைபெறும். இவரின் ஆன்மா இளைப்பாற்றிற்காக இரங்கல் திருப்பலி நாளை (19.10.2006) வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு ஏழாலை புனித இசிதோர் ஆலயத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*ஏழாலை தெற்கு, ஏழாலை.* (54458)

தகவல்:
இராசா கந்தவனம்,
ஜோன் பத்மா (சகோதரி)

## மணமகன் தேவை

1971இல் பிறந்த உயர்கல்விகற்று இலங்கையில் தொழில்புரியும் விவாகரத்துப் பெற்ற பிள்ளைகளில்லாத 5' 7" உயர இந்துப் பெண்ணுக்கு உள்நாட்டு/வெளிநாட்டு மணமகன் தேவை. தொடர்புகளுக்கு: தொ.பே : 081 4923982

## தவறிவிட்டது

*சண்முகராசா கெங்கேஸ்வரன் என்பருடைய தே.அ.அட்டை(760864013V), மோட்டார்சைக்கிள் பதிவுப்புத்தகம், வங்கிப்பற்றுச்சீட்டு என்பன யாழ்.நகருக்குள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இல:03, சந்தை வீதி, மானிப்பாய் எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.* (54457)

## காணி விற்பனைக்கு

*வட்டப்பாதி, தம்பசிட்டியில் அமைந்துள்ள நிலப் பரப்பு 02 குளி 07 வீடு கட்ட உகந்த புலிங்கியனொல்லை என்னும் நாற்சதுரக் காணி விற்பனைக்கு உண்டு.*
தொடர்பு : இராமசாமி பத்மராஜன்,
'செல்வப்பிரஷ்தம்',கொல்லநாடி,
வதிரி - கரவெட்டி. தொ.பே : 0212263068 (54453)

## தவறிவிட்டது

கதிர்காமநாதன் சிவமலர் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (607122644V), விசேட அடையாள அட்டை என்பன நல்லூர் பின் வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கலாசாலை வீதி, திருநெல்வேலி எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். T.P:0214590717

## உடன் தேவை

கல்பேட், புறொயிலர் கோழிகள் உடன் தேவை. நியாயமான விலையில் கொள்வனவு செய்யப்படும். தாசன்பாம், 158/4 கோயில் வீதி, யாழ்ப்பாணம். (ICRC சந்திக்கும் கைலாசபதி கோவிலுக்கு இடையில்) (54450)

THE HALO TRUST

## VACANCY

THE HALO TRUST INVITES APPLICATIONS FROM SUITABLE CANDIDATES FOR THE FOLLOWING POSITION FOR ITS OFFICE IN JAFFNA.

### GIS OPERATOR

**DESIRED QUALIFICATIONS:**

- Available straight away
- Demonstrated competence and experience with GIS (Arc View/Arc Map), Microsoft Access, Excel & Word
- Desirable spoken & written English
- Having a Degree & willing to work in mine fields for survey activities
- Preferably less than 30 years old, living close to Jaffna town
- Females encouraged to apply

PLEASE SEND YOUR CV WITHIN 7 DAYS TO REACH:
(Please include your contact number)

**THE PROGRAMME MANAGER,
THE HALO TRUST,
12, NALLUR CROSS ROAD, JAFFNA.** (54456)

DCPC

யாழ். மாவட்டத்தில் சிறுவர் உரிமைகள் தொடர்பான கண்காணிப்பு பாதுகாப்பு செயற்றிட்டங்களை முன்னெடுத்துவரும் யாழ். மாவட்ட சிறுவர் பாதுகாப்பு குழு (CIDA-FIT) நிதி அனுசரணையுடனான செயற்றிட்டங்களை முன்னெடுக்கவுள்ளது. எனவே, மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழுவில் ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடத்தை நிரப்புமுகமாக அனுபவமிக்கவர்கள் தேவைப்படுகின்றனர். கீழ்க்காணப்படும் தகைமை உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- **கள உத்தியோகத்தர்கள் (Field Officers)**
  - ★ க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
  - ★ 25 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்டவர்களாக இருக்கவேண்டும்.
  - ★ சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் மோட்டார் சைக்கிள் வைத்திருக்க வேண்டும்.
  - ★ சிறந்த தொடர்பாடல் திறன் இருத்தல் வேண்டும்.
  - ★ ஆங்கிலம் மற்றும் பிற மொழி திறன் இருத்தல் வரவேற்கப்படும்.
- **கணனி இயக்குநர் (Computer Operators)**
  இவற்றுடன் மேலதிகமாக .......
  - ★ Corel Draw, Page Maker, Photo Shop, MS Office ஆகியவற்றில் வேலை அனுபவம், தேர்ச்சியுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்ப முடிவு திகதி: 27.10.2006**

விண்ணப்பதாரிகளின் சுயவிவரக்கோவை
அனுப்பப்படவேண்டிய முகவரி:

**இணைத்தலைவர்,**
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு,
அறை எண் 30, யாழ். போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

CIDA-FIT

(54453)

## *பாராட்டி வாழ்த்துகின்றோம்*

### கதிர்காமு தம்பித்துரை



எமது கல்லூரியில் ஆசிரியராகவும், பகுதித் தலைவராகவும் கடமையாற்றி தனது 34 வருட ஆசிரியர் சேவையில் இருந்து இன்று (18.10.2006) 60 அகவை நிறைவில் ஓய்வுபெறும் கதிர்காமு தம்பித்துரை அவர்கள் கல்விச்சேவையுடன் சமூகசேவையும் ஆற்றி பல்லாண்டு காலம் நலமுடன் வாழ பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**யா/அச்சுவேலி மத்திய கல்லூரி, அச்சுவேலி.** (C-51171)

ஆசிரியர் கழகம்.

## பாராட்டி வாழ்த்துகிறோம்

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் 3ஏ பெற்று
எமது கல்லூரிக்குப் பெருமை சேர்த்த மாணவிகளான

செல்வி சோபனா மகேந்திரராஜா (விஞ்ஞானம்) - மாவட்ட நிலை 09

செல்வி றுஷாந்தினி சீவாமிர்தம் (விஞ்ஞானம்) - மாவட்ட நிலை 16

செல்வி துளசி கந்தசாமி (வர்த்தகம்) - மாவட்ட நிலை 04

இவர்களை அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துவதுடன்
பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்ற
226 மாணவிகளையும் பாராட்டி வாழ்த்துகிறோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா /யாழ். இந்து மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(54464)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# நிலை தடுமாறும் நியாயம்

தென்னிலங்கைச் சிங்களத் தலைவர்கள் ஒவ்வொருவரும் அடிக்கடி சூளுரைக்கும் விடயம் ஒன்று உண்டு. அது, ''இலங்கையைத் துண்டாட விடமாட்டோம்!'' - என்ற இறுமாப்பு உரைதான்.

''எங்கள் தாயக தேசத்தைப் பிளவுபட அனுமதிக்கவே மாட்டோம்'' என்பதுதான் அவர்களது பிரதிக்ஞை.

அதேசமயம், மற்றொரு புறத்தில் சிறுபான்மையினரான தமிழர்களின் தாயகத்தைத் துண்டாடவும், பிளவுபடுத்தவும் தயங்கமாட்டார்கள் அவர்கள். அதற்காக சட்ட நடவடிக்கைகளை மாத்திரமல்ல; அரச அதிகாரங்கள் மற்றும் வலிமை மூலம் தமிழர் தாயகமான வடக்கையும், கிழக்கையும் பிரிக்கும் வகையில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களையும் ஏற்படுத்துவதில் கங்கணம் கட்டி நிற்பார்கள்; நிற்கின்றார்கள்.

இலங்கை இனப்பிரச்சினை இப்போது பெரும் ஆயுத மோதலாக உருவெடுத்து, வன்முறைப் புயலாக வீசும் நிலையை எட்டியிருக்கின்றது. இந்தக் கால கட்டத்தில் இனப்பிரச்சினைக்கு அமைதி முயற்சிகள் பல தடவைகள் மேற்கொள்ளப்பட்டு, அவை வரலாறாகக் கடந்து போய் விட்டன.

காலத்திற்குக் காலம், பல்வேறு வரலாற்றுச் சூழ்நிலைகளில் அரங்கேறிய சமாதான முயற்சிகளில் தமிழர் தரப்பு பங்கு கொள்ளத் தவறவில்லை. நீதி, நியாயமான அரசியல் தீர்வுக்காகத் தமிழர்கள் பல தடவைகள் முயற்சித்தும் அது தோல்வியில் முடிந்ததே பட்டறிவு.

சிங்கள மேலாண்மையும், அதிகார வர்க்கமும் தமிழ் மக்களுக்கு நீதி வழங்க மறுத்து, நேர்மையற்ற முறையில் நடந்து கொண்டமையாலேயே அந்த சமாதான எத்தனங்கள் எல்லாம் தோல்வியில் முடிந்தன. இனப்பிரச்சினை இத்துணை மோசமான, கொடூரப் பரிமாணத்துக்குள் சிக்கிக் கொண்டமைக்கு பௌத்த - சிங்களப் பேரினவாத அடக்குறை சக்திகளின் ஏமாற்றுப் போக்கும், கபடத் தந்திர நடவடிக்கைகளுமே காரணம்.

பண்டா - செல்வா ஒப்பந்தமாகட்டும், டட்லி - செல்வா உடன்பாடாகட்டும், இனப்பிரச்சினைத் தீர்வுக்காகத் தமிழர்கள் இறங்கி - இணங்கி - வந்து ஒப்புக் கொண்ட ஏற்பாடுகள் எல்லாம் பேரினவாதிகளினால் கிழித்தெறியப்பட்டன என்பதே வரலாறு. ஏமாற்று வேலையே கடந்த கால அனுபவம்.

முன்னர் பேரினவாத அரசியல்வாதிகளால் அந்த இணக்கங்கள் இல்லாதொழிக்கப்பட்டன.

தமிழரின் இணக்கமின்றியே - சம்மதமின்றியே - தீர்வுத் திட்டம் என்ற பெயரில் இலங்கை - இந்திய அரசுகளால் ஈழத்தமிழர்கள் மீது வலோற்காரமாகத் திணிக்கப்பட்ட ஓர் ஏற்பாட்டில், தமிழருக்குச் சாதகமான ஒரே அம்சமாக இருந்த வடக்கு - கிழக்கு இணைப்பு என்ற விடயம் இப்போது இலங்கையின் நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டிருக்கின்றது.

பண்டா - செல்வா, டட்லி - செல்வா ஒப்பந்த அமுலாக்கங்கள் பேரினவாத அரசியல்வாதிகளினால் கிழித்தெறியப்பட்டன என்றால், இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ் தமிழர்களுக்குச் சாதகமாக அமைந்த ஒரேயொரு அம்சமான இணைப்பு இலங்கையின் சட்ட முறைமையினால் - நீதிமன்றத்தினால் - தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றது.

இந்த நடவடிக்கையின் பெறுபேறு தமிழர்களுக்கு ஆச்சரியத்தைத் தரவில்லை, இது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். என்றாலும், தென்னிலங்கையின் ஏமாற்று வேலை தொடர்வது தமிழர்களுக்கு விசனத்தைத் தருகின்றது. அவர்கள் மிகவும் ஏமாற்றப்பட்டிருக்கின்றார்கள்.

தமிழர் தாயகத்தைத் துண்டாடும் இத்தீர்ப்புக் குறித்து சிங்களம் துள்ளிக் குதித்துக் கொண்டாடுகின்றது.

இவ்விவகாரம் குறித்து அரச நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் கருத்து வெளியிட்ட இலங்கை அரசுத் தலைவர், ''கிழக்கு மாகாண மக்களின் தலைவிதியை வேறு யாரும் தீர்மானிக்க முடியாது. நாடாளுமன்றமோ, நிறைவேற்று அதிகாரமோ, நீதிமன்றமோ கூடத் தீர்மானிக்கக் கூடாது. அந்த மக்களே முடிவு செய்ய வேண்டும். வடக்குடன் இணைந்திருப்பதா அல்லது தனித்து மாகாணமாக இயங்குவதா என்பதைக் கிழக்கு மக்களே தீர்மானிக்க வேண்டும்.'' என்று கூறினார் என கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருக்கின்றன.

நல்ல கருத்து. வரவேற்கத்தக்க நிலைப்பாடு. உண்மையில் மனதாரப் போற்றக் கூடிய போக்கு இது.

அதனால்தான், இதே நியாய நிலைப்பாட்டை இதை ஒத்த அனைத்து விடயங்களிலும் கடைப்பிடிக்க முன்வருமாறு இலங்கைத் தீவின் அரசுத் தலைவரிடமும், எமது அரசிடமும் கோர விரும்புகிறோம்.

கிழக்கு மாகாணம், வடக்கு மாகாணத்துடன் இணைந்திருப்பதா அல்லது பிரிந்திருப்பதா என்பதை கிழக்கு மக்களே தீர்மானிக்க வேண்டும், அவர்கள் விருப்பப்படியே அதைச் செயற்படுத்த வேண்டும், அது விடயத்தில் மறு தரப்புகளின் முடிவை - தீர்மானத்தை - விருப்பை - கிழக்கு மக்கள் மீது திணிக்கக் கூடாது என்றால் -

தனியான இன அடையாளத்தோடு, நிலவழித் தொடர்புடைய தனியான தாயகத்தில், தனித்துவமான மொழி, கலாசாரம், பண்பாடு மற்றும் வாழ்க்கை முறைகளுடன் சுயநிர்ணய உரிமை கொண்ட தாக வாழும் தமிழினம், சிங்களத்துடன் இணைந்திருப்பதா அல்லது பிரிந்து தனித்து வாழ்வதா என்பதைத் தமிழினம் தானே தீர்மானிக்க வேண்டும்? அதுதானே நீதி, நியாயம்? தமிழினம் இது விடயத் தில் எடுக்கும் முடிவின் மீது சிங்கள இனம் தலையிட்டுத் தடுத்து அவர்களை அடிமைப்படுத்துவது எங்ஙனம் நியாயம்?

வடக்கு - கிழக்கு இணைப்புக்கும், பிரிப்புக்கும் ஒரு வகையான நீதி, நியாயத் தத்துவத்தை உரைக்கும் தென்னிலங்கை, தமிழர் தேசமும் சிங்கள தேசமும் தனித்தனியாகவா அல்லது சேர்ந்தா இருக்க வேண்டும் என்ற விடயத்தில் மட்டும் வேறு நியாயத்தை முன்னிறுத்துவது ஏன்?

# உயிருக்கு உத்தரவாதம் தரும் வரை அலுவலகங்களுக்கு செல்லமாட்டோம்

## கிராமசேவையாளர் சங்கம் அரச அதிபருக்கு கடிதம்

யாழ்ப்பாணம்,ஒக்.18

உயிருக்கு உத்தரவாதம் தரும்வரை அலுவலகங்களுக்கு செல்லமாட்டோம் என்று வடக்கு-கிழக்கு கிராம உத்தியோகத்தர்கள் சங்கம் யாழ். அரச அதிபருக்கு அறிவித்துள்ளது.

சங்கத்தின் யாழ். மாவட்ட கிளையின் உப - செயலாளர் மா. மகேந்திரன் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை கண்டித்துள்ள இச்சங்கம், அரச அதிபருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

அக்கடிதத்திலேயே சங்கம் தமது நிலைப்பாட்டை அரச அதிபருக்கு தெரிவித்துள்ளது.

அக்கடித்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எமது சங்கத்தின் யாழ். மாவட்ட கிளையின் உபசெயலாளரும் ஜே/95 அரியாலை மத்தி கிராம அலுவலர் மா.மகேந்திரன் அவரின் அலுவலகத்தில் கடைமையாற்றிக்கொண்டிருந்த போது ஆயுததாரிகளால் சுடப்பட்டு அவ்விடத்தில் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இச் சம்பவத்துக்கு எமது சங்கம் பலத்த கண்டனம் தெரிவிப்பதோடு, கிராம அலுவலர்களாகிய நாம் இச்சம்பவத்தினால் பயந்த நிலையில் கடமையாற்ற முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

மக்களுக்கு சேவையாற்றும் எமக்கு உயிருக்கு உத்தரவாதம் தரும் வரை எமது கடமைகளை நிறைவேற்ற முடியாத நிலையில் உள்ளோம். தங்களிடமிருந்து தகுந்த பதில் கிடைக்கும் வரை எமது அலுவலகங்களுக்கு போகமாட்டோம் என்பதையும் தங்களுக்கு அறியத்தருகிறோம் - என்று அதில் உள்ளது.

# தொழில்நுட்ப பரீட்சை இன்று நடைபெறாது

யாழ்ப்பாணம், ஒக்.18

தொழில்நுட்பக் கல்லூரிகளின் 2005 ஆம்ஆண்டு இறுதிப்பரீட்சைக்கென இன்று இடம்பெறவிருந்த பாடம் தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப் பட்டுள்ளதாக யாழ். தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் ந.யோகராஜன் அறிவித்துள்ளார்.

இந்தப்பாடம் எதிர்வரும் 24ஆம் திகதி இடம்பெறும் என்றும்-

முன்னர் அறிவிக்கப்பட்ட நேர அட்டவணைப்படி நாளை பரீட்சை இடம்பெறும் என்றும் - அவர் மேலும் தெரிவித்தார். (1)

# சோளம்-சோயா மா பற்றாக்குறை தாய்மார் குழந்தைகள் பாதிப்பு

கரவெட்டி, ஒக்.18

உலக உணவு நிறுவனத்தால் வடமராட்சியிலுள்ள குழந்தைகளுக்காக வழங்கப்பட்டுவரும் சோளம்-சோயாமா கப்பலில் குறைந்தளவே எடுத்துவரப்பட்டதால் குழந்தைகளும் பாலூட்டும் தாய்மாரும் பெரும் பாதிப்படைந்துள்ளனர்.

அண்மையில் கப்பல் மூலம் வட பகுதிக்கு ஒருதொகுதி சோளம்-சோயாமா எடுத்துவரப்பட்டது. மிகக் குறைந்தளவு மாவே எடுத்துவரப்பட்டதால் ஒவ்வொரு பிரிவிற்கும் குறைந்த அளவு பங்கிட்டு வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வடமராட்சிச் சுகாதாரப் பிரிவில் 600 சிறுகுழந்தைகள் உள்ளனர். ஆயினும் 200 பைக்கற்றுக்களே வழங்கப்பட்டுள்ளன.

தென்மராட்சியிலிருந்து இடம் பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள குழந்தைகளுக்கு இந்த 200 பைக்கற்றுகளிலுமிருந்தே வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் வடமராட்சி குழந்தைகள் பாதிக்கப்படுவதாகக் கவலை தெரிவிக்கப்படுகின்றது. (202-70)

# தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட வாகனம் குருநாகல் வாசியினால் விற்கப்பட்டதாம்!

## 80 கிலோ வெடிபொருள் கொண்டுவரப்பட்டதாகவும் தகவல்

கொழும்பு, ஒக். 18

ஹபரண, திஹணபதனவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட ஹன்ரர் வாகனம் முன்னர் குருநாகலைச் சேர்ந்த ஒருவருக்கு சொந்தமானதாக இருந்தது என்றும்-

பின்னர்அவர் அதனை வன்னியைச் சேர்ந்த ஒருவருக்கு விற்றிருந்தார் என்றும்-

விசாரணையின்போது தெரியவந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இத்தாக்குதலுக்கு குறித்த வாகனத்தில் 80 கிலோ நிறையுடைய வெடிபொருட்கள் கொண்டுவரப்பட்டுள்ளன எனவும் பூர்வாங்க விசாரணைகளில் தெரியவந்திருப்பதாகப் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

முதற்கட்ட விசாரணைத் தகவல்களை வைத்து- மேற்கொண்டு புலன் விசாரணைகளைத் தொடங்குவதற்கென இரகசியக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் விசாரணைப் பொறுப்பு பாரப்படுத்தப்பட்டிருக்கிறது என்று பொலிஸ் திணைக்களத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

# திருமலை - சாம்பல்தீவில் கிளைமோர் கடற்படையின் வாகனம் அருந்தப்பு

கொழும்பு, ஒக்.18

திருகோணமலை, சாம்பல்தீவு பாலத்திற்கு அருகில் நேற்று முற்பகல் கடற்படையினரை இலக்கு வைத்து கிளைமோர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சாம்பல்தீவு பாலத்திற்கு அருகில் கடற்படையினரின் வாகனம் நிறுத்தி வைக்கப்பட்ட இடத்தில் இக்கிளைமோர் குண்டு பொருத்தப்பட்டிருந்தது. எனினும், இக்கிளைமோர் குண்டு வெடிப்பதற்கு சில நிமிடங்களுக்கு முன்னர் கடற்படை யினரின் வாகனம் அவ்விடத்தை விட்டு அதிகத் தூரம் சென்ற பின் கிளைமோர் வெடித்துள்ளது. இதனால், எந்தவித சேதமும் கடற்படையினருக்கு ஏற்படவில்லை என இராணுவ ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (த)

# வீட்டுத்திட்டத்திற்கு இன்று கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஒக். 18

சமுர்த்தி வீடமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் யாழ். பிரதேச செயலக சமுர்த்தி மகா சங்க எல்லைக்குட்பட்ட பிரிவுகளிலிருந்து வீட்டுத்திட்டத்திற்கு தெரிவாகிய 8 பயனாளிகளுக்கு முதற்கட்டமாக உதவுதொகை வழங்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வு இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். பிரதேச செலயர் பா. செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெறவுள்ளது.

அந்தோனிப்பிள்ளை பிலேமினா, பி. ஜெனிற்றா, பி. மேரிமெற்றில்டா, மு. றீற் றம்மா, பொ. ஜெகநாதன், சி.ராஜேஸ்வரி, பொ. மனோகரன் ஆகியோர் பயனாளிகளாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக சமுர்த்தி மகா சங்க முகாமையாளதர் ச. இராகவன் தெரிவித்துள்ளார். (1-203)

# வன்முறைகளை நிறுத்த கோருகின்றது ஐ.நா.!

கொழும்பு, ஒக். 18

இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் வன்முறைகளைக் கைவிட்டு பேச்சுக்குத் திரும்பவேண்டுமென ஐக்கிய நாடுகள் சபை கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில் தற்போது போர் மூளும் அபாயம் ஏற்பட்டுள்ளது என ஐக்கிய நாடுகள் சபையிலிருந்து ஓய்வு பெறவிருக்கும் செயலாளர் நாயகம் கொபி அனான் தெரிவித்தார். நேற்று முன்தினம் ஹபரணையில் மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதலையும் கண்டித்துள்ள அவர் இலங்கையில் கடந்த சில மாதங்களாக வன்முறைகள் அதிகரித்து வருகின்றமை கவலையளிக்கிறது என்றும் கூறியிருக்கிறார்.

யுத்தத்தின் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது எனவும் கூறிய அவர் இம்மாத இறுதியில் நடைபெறவிருக்கும் சமாதானப் பேச்சுகளில் கலந்துகொள்ள வேண்டுமென இரு தரப்பினருக்கும் அழைப்பு விடுத்திருக்கிறார்.

# தென்மராட்சிப் பாடசாலைகளில் இன்றுமுதல் செய்முறைப்பரீட்சை

தென்மராட்சி,ஒக்.18

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் கர்நாடக சங்கீதம், பரதநாட்டியம் ஆகிய பாடங்கள் கற்கும் மாணவர்களுக் கான கணிப்பீட்டு செய்முறைப்பரீட்சைகள் இன்று புதன் கிழமை தொடக்கம் நடைபெறவுள்ளன.

கர்நாடக சங்கீத பாட பரீட்சை சாவகச்சேரி இந்துக் கல்லூரி, கைதடி முத்துகுமார சுவாமி மகாவித்தியாலயம், மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம் ஆகியவற்றிலும்-

பரதநாட்டிய பரீட்சை சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் - நடைபெறவுள்ளன. இப் பாடங்களை கற்கும். மாணவர்கள் தத்தமது பாடசாலை அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறும் -

இடம்பெயர்ந்து ஏனைய வலயப் பாடசாலைகளில் தற்காலிகமாக இணைந்து கற்கும் மாணவர்கள் தமது முன்னைய பாட சாலை அதிபர்களுடன் தொடர்பு கொண்டு செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றுமாறும் - வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார்.

# மூவரைக் காணவில்லை என நேற்று முறைப்பாடுகள்

கல்வியங்காடு, ஒக்.18

வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்களும் நகரப் பகுதியைச் சேர்ந்த ஒரு இளைஞரும் காணாமற் போயுள்ளனர் என யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வடமராட்சி, வல்வெட்டித்துறை இன்பருட்டியைச் சேர்ந்த எஸ். செல்வதாஸ் (வயது-22) என்பரை கடந்த 12 ஆம் திகதியிலிருந்து காணவில்லை எனவும்-

வடமராட்சி அல்வாயைச் சேர்ந்த ஜேசுராசா சு[illegible] (வயது 24) என்பரை கடந்த 13 ஆம் திகதியிலிருந்து காணவில்லை எனவும்-

அவர்களது உறவினர்களால் யாழ். மனிதஉரிமை ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளதாக யாழ். மனித உரிமைக்குழு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதே வேளை-கொட்டடிப் பகுதியைச் சேர்ந்த எஸ். டெலிக்குமார் (வயது -33) என்பவர் கடந்த ஓகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி தமது சொந்தத் தேவை கருதி கொழும்பு சென்றவர். இதுவரை எவ்வித தகவல்களோ தொடர்புகளே கிடைக்கவில்லை என அவரது உறவினர்களால் யாழ். மனித உரிமை ஆணைக் குழுவில் முறையிடப்பட்டுள்ளது. (1-79)

# தமிழ் இளைஞர்கள் மூவர் மொனராகலையில் கைது

கொழும்பு, ஒக். 18

மொனராகலை மெதகம பிரதேச வீதிச்சோதனைச் சாவடியில் வைத்து நேற்றுமுன்தினம் மூன்று தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனரென மெதகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இம்மூவரும், மட்டக்களப்பு, வாழைச்சேனை, திருகோணமலை ஆகிய பிர்தேசங்களைச் சேர்ந்தவர்களெனத் தெரிவிக்கப்படுகிறது.

2 மோட்டார் சைக்கிளில் வந்த இவர்களை தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தில் தாம் கைது செய்[illegible] எனப்[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபுரங்கள் சரிந்தாலும் ஒலிபரப்புத் தடைப்படாது

## 'புலிகளின் குரல்' பொறுப்பாளர் தமிழன்பன் பி.பி.ஸிக்குத் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.18

''காலை ஒலிபரப்புச் சேவை நடைபெற்றுக்கொண்டிருந்தபோது விமானக் குண்டுவீச்சு நடத்தப்பட்டது. இதில் எமது ஒலிபரப்புக் கோபுரம் முற்றாக அழிக்கப்பட்டது. கலையகங்கள் மற்றும் முக்கிய சில பகுதிகள் தாக்குதல்களுக்கு உள்ளாகின. இருந்தும் சேவை தொடர்கிறது.''

- இவ்வாறு தெரிவித்தார் 'புலிகளின் குரல்' வானொலி நிலையப் பொறுப்பாளர் ந.தமிழன்பன்.

'புலிகளின் குரல்' வானொலி மீது இடம்பெற்ற வான் தாக்குதல் தொடர்பாக பி.பி.ஸி. தமிழோசைக்கு நேற்றிரவு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அந்தச் செவ்வியின் விவரம் வருமாறு:-

கேள்வி:- இன்றைய பாதிப்புகளினால் ஒலிபரப்புகள் தடைப்பட்டனவா?.

பதில்:- நாங்கள் ஏற்கனவே ஏற்பாடு செய்திருந்த மாற்று நடவடிக்கை ஊடாக இருந்த பொருள்களைப் பயன்படுத்தி ஒலிபரப்பைத் தொடர்ச்சியாக நடத்திக் கொண்டிருக்கிறோம். ஒலிபரப்பு முற்றாக நிறுத்தப்படவில்லை.

கேள்வி:- நீங்கள் பெரும்பாலும் பண்பலைவரிசைகளில்தான் ஒலிபரப்பு செய்வீர்கள். இந்த ஒலிபரப்புக் கோபுரம் தாக்கப்பட்ட நிலையில் ஒலிபரப்பை எப்படித் தொடர்வீர்கள். மாற்று ஏற்பாடுகள் எப்படி உள்ளது?

பதில்:- இவ்வாறன தாக்குதல்களை அரச வான்படைகள் தொடர்ச்சியாக நடத்தி வருகின்றன; நாம் சந்தித்து வருகின்றோம்.

அதற்காக நாம் பல மாற்று ஏற்பாடுகள் ஊடாகவே இந்த ஒலிபரப்பை நடத்திக் கொண்டிருக்கிறோம். அதுவும் பண்பலை வரிசையிலேயே ஒலிபரப்பு நடத்தப்படுகின்றது.

கேள்வி:- உங்களது அனைத்து சேவைகளும் ஒலிபரப்பப்படுகின்றனவா?

பதில்:- 'புலிகளின் குரல்' நிறுவனத்துக்கு உட்பட்ட 'புலிகளின் குரல்' ஒலிபரப்பு, 'தமிழீழ வானொலி' ஒலிபரப்பு, சிங்கள மொழியிலான ஒலிபரப்பு ஆகிய மூன்று ஒலிபரப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த மூன்று ஒலிபரப்பு நிலையங்களும் இயங்கிக்கொண்டிருந்த நிலையிலேயே இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

இவற்றில் ஒரு பகுதி தாக்கப்படாமலிருந்தமையினாலேயே எமது ஒலிபரப்புகளை நிறுத்தாமல் தொடர்ந்து ஒலிபரப்பக் கூடியதாக உள்ளது.

அத்துடன், அங்கு புனர்நிர்மாண வேலைகள் நடந்துகொண்டிருந்த வேளைதான் இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கேள்வி:- இத்தாக்குதலில் உங்களது பணியாளர்கள் யாருக்காவது காயம் ஏற்பட்டுள்ளதா?

பதில்:- அதில் எங்களுடைய கலைஞர்களுக்கோ அல்லது நிரந்தரப் பணியாளர்களுக்கோ எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. எமது தற்காலிகப் பணியாளர் ஒருவர் குண்டுத் தாக்குதலுக்கு உள்ளாகி படுகாயமடைந்தார். மற்றொருவர் அதன் அதிர்ச்சி காரணமாக மயக்க நிலைக்கு உள்ளாகியுள்ளார்.

கேள்வி:- போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் இது தொடர்பாக முறைப்பாடு செய்துள்ளீர்களா?

பதில்:- நேரடியாக அவர்கள் வந்து பார்வையிட்டார்கள். முழுமையான இடங்களையும் அவர்கள் பார்வையிட்ட போது, அவர்களிடம் இந்தவிடயத்தை நாங்கள் விவரித்தோம். அவர்கள் சம்பவத்தை முழுமையாக அறிந்துகொண்டு போனார்கள்.

- என்றார் தமிழன்பன்.

(க-12)

## சுகாதார உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை

தென்மராட்சி, ஒக்.18

யாழ்.மாவட்டசுகாதாரத் திணைக்கள நிறுவனங்களில் பணிபுரியும் வெளிக்கள உத்தியோகத்தர்கள் தமது கடமைகளை உடனுக்குடன் மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர்.

இந்த உத்தியோகத்தர்களின் வாகனங்களுக்கு பெற்றோல் வழங்கப்படாததால் அத்தியாவசிய சேவைகளை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.

அத்தியாவசியப் பணிகளை மேற்கொள்ள இந்த உத்தியோகத்தர்களுக்கு வாகனங்கள் வாங்கப்பட்டுள்ள போதிலும் அண்மைக்காலமாக பெற்றோல் தட்டுப்பாடு காரணமாக இவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். (ப)

## உணவகங்களுக்கான பொருள்கள் பற்றி மீளாய்வு செய்ய அதிகாரிகள் யோசனை

நல்லூர், ஒக்.18

யாழ். நகரில் உள்ள உணவகங்கள் மற்றும் சிற்றுண்டிச் சாலைகளின் தேவைக்கென வழங்கப்படும் பொருள்கள் குறித்து அதிகாரிகள் மீள் பரிசீலனை செய்யக் கூடும் என்று அறியப்படுகிறது.

உணவுச் சிற்றுண்டிச் சாலைகளுக்குத் தேவையான உணவுப் பொருள்களை வழங்க யாழ். அரச அதிபர் நடவடிக்கை எடுத்திருந்தார். அதன் படி பொருள்களுக்கான அனுமதிப் பத்திரங்களை பெற்றுக் கொண்ட சில உரிமையாளர்கள் தாம் பெற்றுக்கொள்ளும் பொருள்களை வெளிச்சந்தையில் விற்றுவிடுவதாகக் கூறப்படுகிறது.

சட்ட விரோத மதுபான வகைகளைத் தயாரிப்பதற்குத் தேவையான சீனியை மூடை ஒன்று 22 ஆயிரம் ரூபாவிற்கும் அதிகமான விலையில் விற்றுவிடுவதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன. இந்த நிலைமையால் இது குறித்து மீளாய்வு செய்ய வேண்டிய நிலைமை உருவாகியிருப்பதாகக் கருதப்படுகின்றது.

(ப-111)

## புலிகளின் குரல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'புலிகளின் குரல்' ஒலிபரப்பு வளாகம் தாக்கி அழிக்கப்பட்டிருப்பதை ஊர்ஜிதம் செய்துள்ள புலிகள், இந்தத் தாக்குதல் குறித்துத் தாங்கள் கடும் கண்டனத்தை வெளிப்படுத்தி இருக்கின்றனர்.

'புலிகளின் குரல்', 'தமிழீழ வானொலி' ஒலிபரப்பு நடைபெற்றுக் கொண்டிருந்த போது கொக்காவிலில் உள்ள அதன் மையத்தில் நேற்றுக் காலை 9.45 மணியளவில் 'கிபிர்' விமானங்கள் இரண்டு குண்டுகளையும், 'றொக்கெற்' குண்டுகளையும் ஏவின என்று தெரிவிக்கப்படுகிறது.

'புலிகளின் குரல்' ஒலிபரப்பு நிலையம், ஒலிபரப்புக் கோபுரம், இரண்டு கலையகங்கள் ஆகியவற்றின் மீதும், அதன் சுற்றாடல் மீதும் 25 வரையான றொக்கெட் குண்டுகள் வீழ்ந்து வெடித்தன. இக்குண்டுத் தாக்குதலில் 'புலிகளின் குரல்' ஒலிபரப்புக் கோபுரம் முற்றாக அழிந்தது.

ஒலிபரப்பு நிலையம் மற்றும் அதிலிருந்த உயர்வலு ஒலிபரப்புச் சாதனம், மற்றொரு ஒலிபரப்புச் சாதனம், இலத்திரனியல் உபகரணங்கள் ஆகியன அழிக்கப்பட்டன.

அழிக்கப்பட்ட உபகரணங்களின் பெறுமதி மூன்று கோடி ரூபாவிற்கும் அதிகமாகும் என்று கூறப்படுகிறது.

இத்தாக்குதலின்போது ஒலிபரப்பில் ஈடுபட்டிருந்தோர் உடனடியாக தற்காப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இச்சம்பவத்தில் இருவர் காயமடைந்தனர். உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டன. சுரேந்தர் (வயது-23) மற்றும் கரிதாஸ் ஆகியோர் காயமடைந்துள்ளனர் என்று கிளிநொச்சித் தகவல்கள் தெரிவித்தன.

'புலிகளின் குரல்' ஒலிபரப்பு மையம் மற்றும் அதன் ஒரு கிலோ மீற்றர் சுற்றாடல் பிரதேசம் 'கிபிர்' தாக்குதலில் முற்றாக அழிவுற்றுக் காணப்படுகின்றன என்று இணையத்தளம் ஒன்று தெரிவித்தது.

தாக்குதலுக்குள்ளான 'புலிகளின் குரல்' வானொலி நிலையப் பகுதியை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் பார்வையிட்டார்.

'புலிகளின் குரல்' வானொலியின் சேவை மாற்று ஒழுங்குகள் மூலம் தொடர்ந்து இடம்பெறும், என்றும் சு.ப. தமிழ்ச்செல்வன் கூறினார். (ஐ)

## வானொலி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குதல் இது. சிறிலங்கா அரசின் மிகமோசமான கண்மூடித்தனமான தாக்குதலாகவே இது இருக்கின்றது.

எங்களுடைய மக்களுக்கு சிங்களப் படைகள் ஏற்படுத்தும் அழிவுகளை வெளிப்படுத்துகின்ற ஊடகத்தின் கருத்துச் சுதந்திரத்தை இல்லாதொழிக்கின்ற வகையில் சிறிலங்கா அரசு இத்தாக்குதலை நடத்தியுள்ளது.

இந்த தாக்குதலை விடுதலைப்புலிகளும் தமிழ் மக்களும் கடுமையாக கண்டிக்கின்றனர்.

ஒரு பக்கம் சர்வதேச சமூகத்திற்கு அமைதி நடவடிக்கையில் ஆர்வமாகவும் ஈடுபாடு உள்ளவர்களாகவும் காட்டிக் கொண்டு மறுபக்கம் எமது மக்கள் மீதான இனப் படுகொலையை சிறிலங்கா அரசு தீவிரப்படுத்தியிருக்கின்றது.

புதுக்குடியிருப்பில் நேற்று (திங்கட்கிழமை) மக்கள் குடியிருப்புகள் மீது தாக்குதல் நடத்தி அப்பாவிச் சிறார்களை சிறிலாங்கா வான்படை கொன்றொழித்தது.

இன்று எமது மக்களுக்கு இருக்கின்ற ஒரேஒரு வானொலி நிலையத்தையும் வான்படை தாக்கி அழித்துள்ளது - என்றார்.

## தற்கொலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களில் கலந்துகொள்ள தாங்கள் தயாராக இருக்கின்றனர் என இரு தரப்பினரும் தெரிவித்திருக்கின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எனினும், பேச்சில் கலந்துகொண்டு விடுதலைப் புலிகளின் குழுவினரைச் சுவீஸுக்கு அழைத்துச் செல்வதற்கான போக்குவரத்து ஒழுங்குகள் குறித்து இன்னமும் இறுதிசெய்யப்படவில்லை என்றும் அவர் சொன்னார். (த-12)

## கான்ஸ்டபிள்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனும் பொலிஸ் அலுவலரே சுடப்பட்டுள்ளார் என களுவாஞ்சிக்குடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் காத்தான்குடிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவற்குடா பொலிஸ் காவலரனில் கடமை புரிபவர் என்றும் நேற்றுக் காலை கடமைக்குச் செல்வதற்கு வீட்டிலிருந்து கால்நடையாக வந்து பஸ்ஸுக்காகக் காத்திருந்தவேளையிலேயே இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

குருக்கள்மடம் அதிரடிப்படை முகாமை அண்மித்த பகுதியில் வைத்தே இக்கொலை நடைபெற்றுள்ளது. மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இவர்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். படுகாயமடைந்த இவர் மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியிலேயே உயிரிழந்துள்ளார். களுவாஞ்சிக்குடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (க)

## கூட்டமைப்பு எம்.பிக்கள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னால் கூடி வடக்கு - கிழக்கைப் பிரிக்கும் தீர்ப்பை எதிர்த்துக் கோஷங்களை எழுப் பினர்.

கூட்டமைப்பு எம்.பிக்களின் கோஷம் காரணமாக சபையில் என்ன நடக்கிறதென்பதைத் தெரிந்துகொள்ள முடியாத நிலை உருவானது.

★ ''பிரிக்காதே! பிரிக்காதே!! தமிழர் தாயகத்தைப் பிரிக்காதே!!!

★ ''பிரிக்காதே! பிரிக்காதே!! வடக்கு, கிழக்கைப் பிரிக்காதே!!!

★ ''தமிழீழத்துக்கு அத்திவாரமிட்டிருக்கின்றாய்!''

★ ''வேண்டாம்! வேண்டாம்!! உயர் நீதிமன்றம் எமக்கு வேண்டாம்!!!''

★ ''இந்தியாவே! இந்தியாவே!! தமிழீழத்தை அங்கீகரி!!!''

★ ''தமிழீழத்தில் உச்ச நீதிமன்றத்தை ஸ்தாபிப்போம்.

★ ''ஒழிக! ஒழிக!! கொடுங்கோலாட்சி ஒழிக!!!''

★ ''ஒழிக! ஒழிக!! உயர் நீதிமன்றம் ஒழிக!!!''

★ ''ஒழிக! ஒழிக!! சபாநாயகர் ஒழிக!!!''

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் இவ்வாறு கோஷமெழுப்பிக் கொண்டிருந்தனர். இதற்கு முன்னர் நடைபெற்ற இரு நாடாளுமன்ற அமர்வுகளின்போதும் கூட்டமைப்பு எம்.பிக்கள் 'ஏ-9' வீதியைத் திறக்கும்படி கோரியும், வடக்கு - கிழக்கில் இடம்பெறும் நிகழ்வுகளையும் கண்டித்து சபைக்கு நடுவே அமர்ந்து அமைதியாக சத்தியாக்கிரகம் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

கூட்டமைப்பு எம்.பிக்களின் கோஷத்துக்கு மத்தியிலும் சபாநாயகர் சபை நிகழ்வுகளை வழமைபோல் நடத்திக்கொண்டிருந்தார்.

எம்.பிக்கள் 'பெட்டிஷன்'களை சமர்ப்பித்ததையடுத்து வாய்மூல விடைகளுக்கான கேள்விகள் கேட்கப்பட்டன. ஆளும் கட்சி பிரதம கொறடா அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே, கேள்விகளுக்கான பதிலைக் கூறாமல் சபையில் சமர்ப்பித்தார். சில கேள்விகளுக்கு அவகாசம் கோரினார்.

நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் முதலாவதாக வங்கித் தொழில் திருத்தச் சட்ட மூலம் மீதான ஒத்தி வைக்கப்பட்ட விவாதம் நடைபெறவிருந்தது. எனினும் இத்திருத்தச் சட்டமூலம் தொடர்பாக அமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் ஆராயப்படவிருப்பது குறித்து கட்சித் தலைவர் கூட்டத்தில் விவாதிக்கப்பட வேண்டுமெனக் கோரிக்கை விடப்பட்டதால் சபாநாயகர் காலை 9.40 மணிக்கு சபையை பத்து நிமிடங்களுக்கு ஒத்தி வைத்தார்.

சபை மீண்டும் 10.10 மணிக்குக் கூடியது. சபை ஒத்தி வைக்கப்பட்ட பின்னர் ஜே.வி.பி. எம்.பிக்கள் கூட்டமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. எம்.கே. சிவாஜிலிங்கத்துடன் உரையாடிக் கொண்டிருந்தனர். 10.10 மணிக்கு சபை கூடிய போது வங்கித்தொழில் திருத்தச் சட்ட மூல விவாதம் பிறிதொரு தினத்துக்கு ஒத்தி வைக்கப்படுவதாக சபாநாயகர் அறிவித்தார்.

சபை மீண்டும் கூடியபோது கூட்டமைப்பு எம்.பிக்கள் மீண்டும் கோஷங்களை எழுப்பினர்.

கூட்டமைப்பு எம்.பிக்களின் கோஷங்களுக்கு மத்தியிலேயே பிரதமரும், உள்நாட்டு நிர்வாக அமைச்சரும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சுக்கான ஒரு குறை நிரப்புப் பிரேரணையும், ஏழு அங்கக் கட்டளைச் சட்டம் மற்றும் நிதிச் சட்டத்தின் கீழான ஏழு கட்டளைகளும், சபையில் எதுவித விவாதமுமின்றி நிறைவேற்றப்பட்டன. காலை 10.15 மணிக்கு சபாநாயகர் நாடாளுமன்றத்தை இன்று காலை 9.30 மணிவரை ஒத்தி வைத்தார்.

நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்ட பின்னரும் கூட்டமைப்பு எம்.பிக்கள் சபைக்கு நடுவே அமர்ந்து அளவளாவிக் கொண்டிருப்பதைக் காணக்கூடியதாக இருந்தது. நேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 13 எம்.பிக்களே சபைக்கு வந்திருந்தனர். இரா. சம்பந்தன், மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன் உட்பட 9 எம்.பிக்கள் நேற்று சபைக்குச் சமுகமளித்திருக்கவில்லை.

## கொழும்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை -

நோர்வே விசேட தூதர் ஹன்சன் போவர் நேற்று மாலை அரச பேச்சுக்குழுத் தலைவரும் அமைச்சருமான நிமால் சிறிபால டி சில்வாவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

தற்போதைய நிலைவரம் மற்றும் சமாதானப் பேச்சு ஆகியன குறித்து இருவரும் கலந்துரையாடினர்.

இதேவேளை, கிளிநொச்சியிலுள்ள புலிகளின் சமாதான செயலகத்தில் நாளை முற்பகல் 10 மணிக்கு விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்துவார் என கிளிநொச்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இது ஒருபுறமிருக்க இலங்கைக்கான ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷி இன்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்கிறார். இவர் காலை 10 மணிக்கு சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசுவார்.

தென்கிழக்கு ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்க ராஜாங்க செயலாளர் ரிச்சர்ட் பௌச்சர் நாளை இலங்கைக்கு வருகை தரவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (க)

A/L Day Class
கலை, வர்த்தகப் பிரிவுகள்
ஆரம்பம்: 19.10.2006
Thu.- 3p.m.
BRAIN POWER INSTITUTE

வெளிவந்துவிட்டது
தரம் 9 மாகாண மட்டப் பரீட்சை
ENGLISH
எதிர்பார்க்கை வினாத்தாள்/ PAST PAPERS விடைகளுடன்
★சகல புத்தகசாலைகளிலும் கிடைக்கும்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.10.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org